
IT OUGHT TO BE BEAUTIFUL I LIVE HERE
JHLC - ESTD:10.09.1943

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி

# சித்தம் அழகியர்



**Jaffna Hindu Ladies' College**
**Old Girls Association**

Celebrating 75th Anniversary
1943 2018

# யாழ் இந்து மகளிர் கல்லூரி

பழைய மாணவிகள் சங்கம்

# சித்தம் அழகியர்

## பவளவிழா மண்டப திறப்பு விழா
## சிறப்பு மலர்

**It ought to be beautiful I live here**

# Jaffna Hindu Ladies' College

**Old Girls Association**

**06.09.2017**

Celebrating 75th Anniversary

1943 2018

# கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ் நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடும் கல்லூரி - எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக் கொளியாய்
பிறங்கிடும் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடும் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

இந்து மதப்புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடும் கல்லூரி - இயல்
சிந்தை வளம் பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சியமனைத்தும்
நல்கிடும் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழு துளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

உ

சிவமயம்



# வரமருள்வாய் இராஜவரோதயப் பிள்ளையாரே

பூனை தூக்கிய பிராயடியென்னு மோர்
பொலிந்த நற்சோலை நடுத்தோட்டமிருக்கும்
ஆனைமுகனாம் இராஜவரோதயன் அடிபணிந்திட்டால்
அல்லை தொல்லைகள் அகன்றோடிப் போகும்
தேனைப் பாகைப் போல் தித்திக்கும் கல்வி
தேடித் தேடியே புகழ் வந்து சேரும்
பானை வயிற்றோனே பால கணபதியே
பாவையர் வாழ்வோங்க வரமருள்வாயே !

நாளும் உன்தலம் நாடி வலம் வந்து
நல்ல கல்வி வரமதை வேண்டினால்
சூழும் தடையெல்லாம் ஓடி மறைந்திடும்
சுகங்கள் பெருகிடும் சுமைகள் அகன்றிடும்
ஆளும் அதிபர்கள் ஆசிரியர்கள் கூடி
அரிய சேவைகள் ஆற்றிப் பணி செய்ய
வேழமுகத்தோனே இராஜவரோதயா பெரும்
வெற்றிகள் பெருகிட வரமருள்வாயே !

எந்தவேளையும் உன்துணை வேண்டினோம்
எடுத்த காரியம் சிறந்திட அருளுவாய்
கந்த வேலனின் அண்ணனே விநாயகா
கல்வி தந்தெம்மைக் காத்திடும் வள்ளலே
உந்தன் பேரருள் பெற்று வளர்ந்திட்ட
உத்தம பெண்கள் சித்தத்தில் நின்றுமே
இந்து மகளிர் கல்லூரி ஓங்கிட
என்றும் துணையாகி வரமருள்வாயே!



The Education Officer Unveils the Portrait of the Late Mrs. V. Sivagurunathar

1960 - 1961



கல்லூரியின் ஸ்தாபகர்

**திருமதி. விசாலாட்சி சிவகுருநாதர்**

# சித்தம் அழகியர்
## (பழைய மாணவிகள் சங்க வெளியீடு)



பழைய மாணவிகளின் ஒன்றிணைந்த முயற்சியினால் நிர்மாணிக்கப்பட்டுப் பவளவிழா ஞாபகார்த்தமாகக் கல்லூரி அன்னைக்குச் சமர்ப்பணம் செய்யப்படுகின்ற "பவளவிழா மண்டப" திறப்பு விழாவின் சிறப்பு மலராக "சித்தம் அழகியர்" வெளியிடப்படுகின்றது.

"சித்தம் அழகியர் பாடாரோ நம் சிவனை" என வேண்டி நின்றார் மணிவாசகர். இங்கும் கல்லூரி அன்னையின் வளர்ச்சியை வேண்டி, எதிர்பார்த்து நிற்கின்ற தூயசிந்தையுள்ள, அன்னையால் உருவாக்கப்பட்ட பழைய மாணவிகள் கல்லூரியின் வளர்ச்சியில், மாணவர்களின் செயற்பாடுகளுக்கு அடிப்படைத் தேவையான வகுப்பறைகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கோடு வகுப்பறைகளையும், இணைப்பாட விதானங்களுக்குத் தேவையான மண்டபத்தையும் கொண்ட மூன்று மாடிக் கட்டடத்தை அமைத்து அன்னைக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி ஸ்தாபிதத்திற்கு வித்திட்ட தார்மீக சிந்தையுள்ள பெண்மணியான திருமதி விசாலாட்சி சிவகுருநாதரினதும் அவர்களின் பாதையை அடியொற்றிக் கல்லூரியின் வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நினைந்த பழைய மாணவிகளினதும் நற்சிந்தையை எடுத்துக்காட்டும் முகமாக இம்மலருக்கு "சித்தம் அழகியர்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மேலும் இம்மலரானது பெரியோரின் ஆசிச்செய்திகளையும், கல்விப்புலம் சார்ந்தவர்களின் வாழ்த்துரைகளையும், கல்லூரியின் பழைய மாணவ சங்க தலைவிகள், உறுப்பினர்களின் எண்ணப்பகிர்வுகளையும் கொண்டுள்ளதோடு, இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கத்தையும், அதன் ஸ்தாபிதத்திற்கும் கல்லூரியின் ஆரம்ப கால வளர்ச்சிக்கும் அக்காலப் பெரியோர்கள் எடுத்த முயற்சிகளை, செய்த அருந்தொண்டுகளைத் தற்கால இளைய சமுதாயத்திற்கு அறியத்தரும் வகையில் " இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண் கல்வியும் இந்து மகளிர் கல்லூரியின் தோற்றமும் " எனும் கட்டுரையும் இணையப்பெற்றுள்ளது.

தன்னுடைய வளர்ச்சிப் பாதையில் 75 வருடங்களை மட்டுமே நிறைவு செய்திருக்கும் எமது கல்லூரி, தன்னை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு காலங்கள் நிலைத்திருக்கும் ஏனைய பெண்கள் கல்லூரிக்கு இணையாக குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்தமைக்கு அதன் ஆரம்ப கால வளர்ச்சியில் உறுதியான கொள்கையுடன் திட்டமிட்டுச் செயற்பட்ட அக்காலச் சமூகப் பெரியார்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எவ்வாறு உந்து சக்தியாகச் செயற்பட்டனர் என இக்கட்டுரை விளக்குகின்றது.

அதுமட்டுமல்லாமல் கல்லூரியின் ஆரம்ப காலகட்டங்களில் கல்லூரியின் தோற்றம், கல்லூரியில் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்த செயற்பாடுகள் என்பவற்றைக் காட்டும் சில புகைப்படங்களும், கல்லூரியின் உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் முன்னின்று உழைத்த இந்துக்கல்லூரி அதிகார சபையினரின் புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளன. காலத்தாற் கிடைத்தற்கரியனவாகிவிடும் என்ற நோக்குடனேயே கிடைத்த சிலவற்றை இங்கு தந்துள்ளோம்.

அத்துடன் இன்றைய கால கட்டத்தில் உள்நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் வாழும் புதல்விகள் அன்னைக்குப் பரிசளித்த "பவளவிழா மண்டபத்தை" அமைப்பதற்காக மேற்கொண்ட நிகழ்வுகளை வண்ணப்படங்களாகவும் இங்கு தந்துள்ளோம்.

இப்பவளவிழா மண்டப உருவாக்கத்திற்கும் இம்மண்டபத் திறப்பு விழா சிறப்புற அமையவும் அருள்பாலித்த எமது கல்லூரியின் நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையாரை என்றென்றும் எம் சிந்தையில் கொள்வோம்.


**மலராசிரியர்**
**செல்வி நிர்மலா சோமசுந்தரம்**

# சமர்ப்பணம்

நீலக் கடலலை தாலாட்டும் - எங்கும்
நிறைந்த தமிழ் ஓங்கிப் புகழ் பரப்பும்
கோலமிகு வாழ்வைக் கொண்டு விளங்கிடும்
குன்றாப் புகழ்மிகும் யாழ்ப்பாணம் - தன்னில்
சீலமிகு பெருஞ்சிறப்புக்கள் ஓங்கிடும் யாழ்
இந்து மகளிர் கல்லூரித் தாய் இன்று
ஆலமரமென அகன்று கிளை வீசி
அகிலமெங்கும் விழுதூன்றி நின்றாள்
பாரினில் புதுமைப் பெண்களாய்ஆகினோம்
பட்டங்கள் பதவிகள் பல பெற்றோம்
சீரிய குடும்ப விளக்குகளாகி
செந்தமிழ் பண்பாடு பேணி நின்றோம்

நேரிய மகளிராய் ஆக்கியே எம்மை
நிலமதில் புகழ்பெற வைத்தவள் நீயே
ஊரினைத் துறந்து உலகெலாம் பறந்தும்
உன்பணி தொடரவே கைகோர்த்தோம்
வித்தைகள் பயின்று விதவிதமாக
எழுந்தோம்! நிமிர்ந்தோம்! சிகரங்கள் தொட்டோம்!
உத்தமத்தாயே உன்தாள் பணிந்தோம்
ஓங்கிடும் புகழ் என்றும் நிலைபெறவே
புத்தம் புதிய நல்வகுப்பறைக் கட்டிடம்
புனிதப் பணி என கருதி நின்ற
சித்தம் அழகியர் செய்த நற்பணி உன்
சிந்தை குளிர்ந்திடத் தந்தோம் அம்மா!

திருமதி செ. சத்தியபவானி
பழைய மாணவி, ஆசிரியர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி



# கல்லூரி ஆலய பிரதம குருக்களின் வாழ்த்துச் செய்தி

எமது பண்பாட்டு சூழலுக்கேற்ப யாழ்ப்பாணத்தில் பெண் சிறார்களுக்குக் கல்வியறிவூட்டி வருகின்ற தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்வது யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகும். கல்வியினுடைய பிரதான நோக்கமாகிய ஒழுக்கத்தையும், வினையத்தையும், குரு பக்தியையும் இளந்தலை முறையினர் பெறக்கூடிய வகையில் கடந்த 75 ஆண்டுகள் சிறந்த பணியாற்றி வரும் இக்கல்லூரி தனது பவளவிழா ஆண்டையொட்டி பழைய மாணவிகளினால் பரிசளிக்கப்பட்ட "பவளவிழா மண்டபம்" கட்டடத் திறப்பு விழாவை கொண்டாடுவதையறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

"மங்கையர் மாண்பை மன்பதை அறிய முழங்கிடும் கல்லூரி" என்றும் "மங்கையர் வாழ்வின் இலட்சியமனைத்தும் நல்கிடும் கல்லூரி " என்றும் புகழ்ந்து கூறப்பட்ட எம் யாழ் இந்து மகளிர் கல்லூரித் தாயின் சேய்களாகிய பழைய மாணவிகளின் அரும் பெரும் முயற்சியாலும் அயராத உழைப்பினாலும் அக்கறையோடும், நன்றியுணர்வோடும், கட்டுவிக்கப்பட்டுள்ள இக்கட்டடத் திறப்புவிழாவிற்கும், பவளவிழாவிற்கும் ஆசியுரை கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் செயற்படும் பழைய மாணவர் சங்கங்கள் மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள இம்மண்டபமானது இம்மாணவர்கள் எவ்வளவு தூரம் தம் கல்லூரியையும் தம்மை கற்பித்து ஆளாக்கி வாழவைத்த ஆசிரியர்களையும் நன்றி மறவாது நினைவு கூருகின்றார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது. அவர்களின் வாழ்வு சிறப்புற நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

கட்டடத் திறப்பு விழாவிற்கான சிறப்பு மலர் "சித்தம் அழகியர்" நிறைவுடன் வெளிவரவும் இக்கல்லூரி மாணவர்கள் இன்னும் பல சாதனைகள் புரிந்து அடுத்து வரும் நூற்றாண்டு விழாவினை மிகச்சிறப்பாக கொண்டாட வேண்டும் என எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதயப் பெருமானின் அருளுடன் பூரண நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

**பா. நகுலேஸ்வரக் குருக்கள்**
கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையார் ஆலய
பிரதம குருக்கள்

முதலமைச்சர் - வட மாகாணம்

විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

# Justice C.V.Wigneswaran

**Chief Minister – Northern Province**

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்றுறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்

මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සමාජ සේවා හා පුනරුත්ථාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන සහ පළාත් පරිපාලන, අමාත්‍යවරයා

Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Social Service, Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration




எனது இல / මගේ අංකය / My No: NP/CM/media/02/08/2017

திகதி / දිනය / Date: 02.08.2017

## வாழ்த்துச் செய்தி

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியரால் நிர்மாணிக்கப்பட்ட பவள விழா கட்டட திறப்பு விழாவையொட்டி வெளியிடப்படவுள்ள "சித்தம் அழகியர்" எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இந்து சமய மாணவிகள் சைவத்தமிழ் பாரம்பரியத்தில் தமது உயர்கல்வியைக் கற்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் உருவாக்கப்பட்டதே இக் கல்லூரி. கடந்த 74 ஆண்டுகளில் இக் கல்லூரி புரிந்த சாதனைகள், உருவாக்கிய மாணவர்களின் சிறப்புக்கள் சொல்லில் அடங்கா. பல குறைகளுடன் சவால்களுக்கு முகம்கொடுத்து முன்னேறி வந்துள்ளனர்.

கல்லூரியின் பௌதீக வளப் பற்றாக்குறை இருப்பதை அறிந்த பழைய மாணவியர் தாம் கல்வி கற்ற கல்லூரிக்காக தமது உழைப்பினால், முயற்சியினால் ஒரு வகுப்பறைக் கட்டடத் தொகுதியினை அமைத்துக் கொடுத்துள்ளனர். அவர்களின் தூய சிந்தனையில் உருவாகிய இக் கட்டடம் இக் கல்லூரியின் பவள விழா நிகழ்வுகளின் போது திறந்து வைக்கப்படவிருப்பதால் இதற்கு "பவள விழா மண்டபம்" என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்திருக்கின்றனர்.

"சித்தம் அழகியர்" எனும் சிறப்பு மலர் இக் கட்டட உருவாக்கம் பற்றிய செய்திகள், அதற்கான நிதி பெறப்பட்ட வழிமுறைகள், நிதிப் பங்களிப்பு விபரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும் என்று நான் அறிகின்றேன். இம் மலர் காலங் கடந்தும் இக் கல்லூரி பற்றிய ஒரு எழுத்தாவணமாக விளங்கும்.

இக் கட்டடத் தொகுதியை வழங்குகின்ற இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் சித்தம் என்றும் அழகானதே என்ற எண்ணக்கருவை வெளிப்படுத்தி நிற்கக் கூடியதாக இம் மலருக்கு "சித்தம் அழகியர்" என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

இக் கல்லூரி மென்மேலும் வளர்ந்து சமய அறிவுடன் கூடிய ஆரோக்கியமான ஒரு கல்விச் சேவையை மாணவியர்களுக்குத் தொடர்ந்தும் வழங்க வேண்டும் என வாழ்த்துகினேேறன்.

அன்பே சிவம்!
நன்றி

க.வி. விக்னேஸ்வரன்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்,
முதலமைச்சர்
வடமாகாணம்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்


A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் / A9 පාර, කයිතඩි, යාපනය / A9 Road, Kaithadi, Jaffna

தொலைபேசி / දුරකථන / Telephone: 021 221 7311, 021 221 7313

தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 221 7227, 021 221 7310

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / email: cmofficenorthernpc@gmail.com



# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகளால் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவில் வெளியிடப்படவுள்ள "சித்தம் அழகியர்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் மாவட்டத்தில் 1 AB பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பவளவிழா ஞாபகார்த்தமாக பாடசாலையின் வகுப்பறைத் தேவைகளைக் கருத்திற் கொண்டு பாடசாலையின் பழைய மாணவிகளின் சங்கக் கிளைகள் அனைத்தும் ஒன்றிணைந்து 29 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடிக்கட்டடம் அமைத்துள்ளமை பாராட்டத்தக்கதாகும். பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கு பௌதீக வளங்கள் பூர்த்தி செய்யப்படுவது அவசியமானதாகும். அந்த வகையில் பாடசாலை மாணவிகளின் தேவை கருதி இக்கட்டடம் அமைக்கப்பட்டமை மாணவிகளுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

அந்த வகையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் மாணவிகளுக்கு மிகப் பயன்மிக்கதொன்றாக அமையும் என்பதில் எவ்வித ஐயமில்லை. மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை உயரிய நோக்காகக் கொண்டு பழைய மாணவிகளால் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தின் திறப்பு விழாவும் மலர் வெளியீடும் சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இ.இரவீந்திரன்**
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்
02.08.2017



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை

யாழ் இந்து மகளிர் கல்லூரியினது பழைய மாணவிகள் சங்கத்தினால் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தினை பாடசாலைக்கு வழங்குவது தொடர்பாக வெளியிடப்படும் "சித்தம் அழகியர்" மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ் வலயத்தில் மகளிருக்கான சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலை திகழ்ந்து வருகின்றது. அதிகளவு மாணவிகள் கல்வி கற்கின்ற பாடசாலையாகவும் இப்பாடசாலை திகழ்கின்றது. இப்பாடசாலயில் கற்றலுக்கான வகுப்பறைக் கட்டடங்கள் பற்றாக்குறையாக இருந்தமை இப்பாடசாலையினது செயற்பாடுகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக இருந்தது. பழைய மாணவிகளது முயற்சியினால் ரூபா 29 மில்லியன் பணச் செலவில் மூன்று மாடிக் கட்டடம் இப்பாடசாலைக்கு அமைத்துக் கொடுக்கப்படுவது பாடசாலையினது செயற்பாடுகள் மேம்படுவதற்கு வழிவகுக்கும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் கல்விப் பெறுபேறுகளிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கி வருகின்றனர். அந்த வகையில் இப்பாடசாலையில் கல்வி கற்று புலம்பெயர் நாடுகளில் வதியும் பழைய மாணவிகள் தாங்கள் கல்வி கற்ற பாடசாலைக்கு பெருமளவு பணத்தினை செலவிட்டு 3 மாடிக் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுப்பது பாராட்டுக்குரியதாகும். பழைய மாணவிகளது இவ்வாறான செயற்பாடுகள் பாடசாலையினது வளர்ச்சிக்கு மேலும் உந்து சக்தியாக இருக்கும்.

இம்மூன்று மாடிக் கட்டடத்தினை அமைப்பதற்கு பங்களிப்பினை வழங்கிய அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ. உதயகுமார்**
மாகாண கல்விப் பணிப்பாளர்.

வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

**Zonal Education Office - Jaffna**

Telephone:
021 222 1649

Fax:
021 222 1649


My Number:யா/வகஅ/கஅ/விக/09

Date: 01 .08. 2017



## ஆசிச்செய்தி

பாவையர்கள், பண்ணும் பரதமும் கண்ணெனக் கொண்டு மகிழ்ந்து பயிலும் யா/இந்து மகளிர் கல்லூரி என்றும் எழில்மிக்கது. வனப்பு மிக்க கல்லூரியின் சிறப்பு வாய்ந்த தோற்றத்திற்கு புதுமண்டபம் புதிய தோற்றத்தையும் புத்தூக்கத்தையும் கொடுத்து மேலும் புதுப் பொலிவு பெறச் செய்கின்றது.

இக்கல்லூரியில் கவின்கலையையும் பைந்தமிழையும் அத்தோடு விந்தைமிகு விஞ்ஞானத்தையும் பயின்ற பாவையர்கள் பூவுலகில் பொலிந்து சிறந்து விளங்குகின்றனர். பாரில் பரவி வாழும் பூவையர்கள் தாம் பயின்ற கல்லூரித்தாயின் நிழலை நாளெல்லாம் நினைத்து மகிழ்ந்து வாழவும் வருங்கால மங்கையரின் வளமான வாழ்வுக்கு வழிவகுக்க ஒருமனதுடன் ஒருங்கு கூடி புதுப்பொலிவுடன் புதுமண்டபத்தை அமைத்தது, என்றும் நினைந்து போற்றுதற்குரியது.

தேசமெல்லாம் புகழ் பரப்பி வாசம் வீசவைத்த நேசமிக்க கல்லூரித்தாய் பவள விழா கண்டு மெய்ம்மறந்து நிற்கின்றாள். சிந்தையாலும் சீரிய செயலாலும் வந்தனை செய்த சீர்மை வாய்ந்த அழகியர்களின் நேர்மை வாய்ந்த செயற்பாட்டை "சித்தம் அழகியர்" என்னும் சிறப்பு நூல் சிறப்புறப் பறை சாற்றுகிறது. இச்செம்மை வாய்ந்த சிறப்பு நூல் காலத்தாலும், காற்றாலும், நீராலும் கேடில்லாமல் நீடு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

த. தெய்வேந்திரராஜா
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்



# கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் ஒருங்கே தழைத்தோங்கும் கல்விக்கூடமாகிய யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகளால் வெளியிடப்படும் "சித்தம் அழகியர்" நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பேருவகையடைகின்றேன்.

உலகெங்கும் பரந்து வாழ்கின்ற எமது கல்லூரித் தாயின் புதல்வியர்கள் தாயின் தேவைகளை அறிந்து காலத்துக்குக் காலம் பல்வேறு வகைகளிலே தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றனர். அந்த வகையில் எமது கல்லூரியின் யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கம், கொழும்பு பழைய மாணவர் சங்கம் மற்றும் கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம் நாடுகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பழைய மாணவ சங்கங்களும் ஒன்றிணைந்து பவளவிழாக் காணும் எமது கல்லூரி அன்னைக்கு பவளவிழா மண்டபம் ஒன்றினை 29 மில்லியன் ரூபா செலவில் அமைத்துத் தந்துள்ளனர்.

மாணவர்கள் வசதியாக இருந்து மகிழ்ச்சிகரமான கற்றலில் ஈடுபடுவதற்கு ஏதுவாக இவ்வகுப்பறைகள் அமைந்துள்ளன. அத்துடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு களம் அமைக்கும் விதத்திலே மண்டபம் அமைந்திருப்பது மாணவிகளை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துவதோடு அவர்களின் திறன்களை வெளிக்கொணரவும் வித்திட்டுள்ளது எனலாம்.

கல்லூரித்தாயின் நினைவுகளை தம் நெஞ்சிலே சுமந்து பல்வேறு விதங்களிலும் உதவிக்கரம் நீட்டும் பழைய மாணவிகளின் செயற்பாடுகள் போற்றப்பட வேண்டியவை. பவளவிழா மண்டப திறப்பு விழாவை நினைவு கூரும் ஆவணமாக "சித்தம் அழகியர்" வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி மி. விமலநாதன்**
அதிபர்
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி



# முன்னயநாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி

இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகளால் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடத் தொகுதியின் திறப்பு விழா நிகழ்வில் பவளவிழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலரான "சித்தம் அழகியர்" என்ற மலருக்கு முன்னயநாள் அதிபர் என்ற வகையில் வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1989 சித்திரையில் இக்கல்லூரியில் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக இடமாற்றம் பெற்று இணைந்து கொண்டேன். எனது இக்கல்லூரிக்கான 23 வருட சேவையில் இறுதி 6 வருடங்கள் அதிபராக பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது.அக்காலப் பகுதியில் கல்லூரியின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் கடமையைப் பொறுப்பேற்றேன். கல்வித் திணைக்களத்தால் கிடைக்கப்பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட நிதியுதவியுடன் வகுப்பறைத் திருத்தங்கள், குடிநீர், சுகாதார வசதிகளையே மேம்படுத்த முடிந்தது. பொருத்தமான வகுப்பறை, வகுப்பறைப் பற்றாக்குறைகளை நிவர்த்திக்க முடியாத நிலையில் இருந்தமையால் புலம்பெயர் பழைய மாணவர் சங்கங்களுடன் தொடர்புகொண்டு கல்லூரித்தேவைகள் முன்வைக்கப்பட்டன.

கல்லூரி அன்னையின் தேவையறிந்து கனடா, அவுஸ்திரேலியா, இலண்டன், பழைய மாணவர் சங்கங்கள் உதவுவதற்கு முன்வந்தன. அந்தவகையில் கனடா பா.மா.சங்கம் கல்லூரியின் அனைத்து மாணவர்களும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெறும் வகையில் மேலதிக கணணி அலகு ஒன்றை அமைப்பதற்குத் தேவையான கணணிகள், தொழில்நுட்பத்தினூடாகக் கற்றலுக்கான உபகரணங்களை வழங்கி மாணவர்களின் கணணிக் கற்கையில் பெரும் பங்காற்றியுள்ளனர். இவற்றுக்கு உறுதுணையாக செயற்பட்ட கனடா. ப.மா.ச போசகரான செல்வி நல்லம்மா குழந்தைவேலு அவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டு தொடர்ந்து செயற்பட்டுவருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

மாணவர், ஆசிரியர் நலநோம்பலில் அக்கறை கொண்டு கல்லூரிக்கு ஒரு சிற்றுண்டிச்சாலையை அவுஸ்திரேலியா, பழைய மாணவ சங்கத்திடம் கோரிய போது உடன் செயற்பட்டு அதற்கான நிதியுதவியை வழங்கியதால் 25'x50' விஸ்தீரணம் கொண்ட சுகாதார வசதிகளுடனான சிற்றுண்டிச்சாலையை அமைக்க முடிந்தமை பாராட்டுக்குரியதாகும். சம காலத்தில் ஆன்மீகத்துடனான கல்வி புகட்டப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் இலண்டன் பழைய மாணவர் சங்கம் விநாயகர் ஆலய புணர்நிர்மாணப் பணிகளுக்கான நிதியுதவியை வழங்கியிருந்தமை பாராட்டுக்குரியது. அக்காலப்பகுதியில் கல்லூரியின் பாட, இணைப்பாடவிதான வளர்ச்சி கண்டு மேலும் உயர்நிலைக்கு வர வேண்டும் என்று ஆர்வம் கொண்ட புலம்பெயர் பழைய மாணவர்கள் வகுப்பறைத் தொகுதியை அமைப்பதற்கான நிதிதிரட்டும் செயற்பாடுகளை மேற்கொண்டு பெருமளவு நிதியை திரட்டி அச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வந்தனர். ஆனால் 2012 சித்திரையுடன் எனது கல்லூரிக்கான சேவை நிறைவு செய்யப்பட்டதால் செயற்திட்டம் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டது.

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவியான திருமதி அபிராமி கைலாயபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா, இலண்டன், அவுஸ்திரேலியா பழைய மாணவ சங்கங்களை ஒன்றிணைத்து இச்செயற்திட்டத்தை நிறைவேற்றியுள்ளமை பெரிதும் பாராட்டுக்குரியதாகும். எனது அதிபர் சேவைக்காலத்தில் பழைய மாணவர் சங்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தலில் என்னுடன் முன்னின்றுழைத்த தாயச்சங்கத்தின் பொருளாளரான ஆசிரியர் செல்வி நிர்மலா சோமசுந்தரம் அவர்களின் தொடர்ச்சியான அயராத உழைப்பு போற்றுதற்குரியது.

கல்லூரித்தாயின் அரவணைப்பில் வளர்ந்த பழைய மாணவர்கள் இன்று இப்பெருங்கைங்கரியத்தை கல்லூரிக்கு அளித்துள்ளார்கள் என்றால் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் செயற்திறன் மிக்க சிந்தனை கொண்ட மகளிராக அகிலம் முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை சான்று பகர்கின்றது.

கல்லூரித்தாயின் பெருவளர்ச்சியில் பங்காற்றும் பழைய மாணவர்களின் சிறப்பான முயற்சிகளுக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் வழங்குவதுடன் இக்கல்லூரி சமூகத்துக்கு நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகரின் அருள்வேண்டி அமைகின்றேன்.

**திருமதி வேதநாயகி பேரின்பநாதன்**
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்
முன்னய நாள் அதிபர் இ.ம.கல்லூரி



# பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளைத் தலைவியின் வாழ்த்துச்செய்தி

## "எது நடந்தாலும் எடுத்த காரியத்தை பூர்த்தி செய்"

மேற்கூறிய சொற்கள் இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. கட்டடம் கட்டுவதென்றால் இலகுவான காரியம் அல்ல. 2015 நவம்பரில் அடிக்கல் நாட்டினார் மறைந்த மனித நேயர். உடல் நலம் கடுமையாக பாதிப்படைந்த நிலையிலும் சற்று தெளிவாக இருந்த தருணங்களில்" கட்டட வேலைகள் எப்படி?" என்று கேட்பார். பணி ஆரம்பித்து பதினைந்து மாதங்களில் அவர் மறைந்து விட்டார். ஆனால் அவருடைய சொற்கள் எனக்கு உந்து சக்தியாக கடந்த ஆறு மாதங்களிலும்இருந்தன.

மனதைக் கல்லாக்கிக்கொண்டு பணிகளை தொடர்ந்து வந்தேன். இது தனி நபரினதோ அல்லது குடும்பத்தினரதோ சாதிப்பல்ல. உலகளாவிய ரீதியில் எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி அன்னையின் புதல்விகள் உள்ளார்கள். எத்தனையோ அன்பு உள்ளங்கள் என்னைத் தேற்றி ஊக்குவித்துக்கொண்டே இருந்தன. யாழ் இந்து மகளிர் கல்லூரி பல துறைகளில் திறமை மிக்க மாணவிகளை உருவாக்கியுள்ளது.இந்த மாணவிகள் தமது பிற்காலத்தில் தமக்கு அறிவு புகட்டிய அன்னையை மறவாது எங்கிருந்தாலும் கல்லூரியி ன் வளர்ச்சிக்கு கண்ணும் கருத்துமாக உதவி வருகின்றார்கள். இதற்கு உறுதுணையாக தாம் வதியும் நாடுகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கங்களை அமைத்துள்ளார்கள்.

இச்சமயத்தில் இருபது மாதங்கள் பின்னோக்கிப் பார்ப்போம். வளர்ந்து வரும் கலலூரியின் கட்டட வசதி போதாக் குறையை நிவர்த்தி செய்ய உலகளாவிய ரீதியில் பரந்துள்ள யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கங்கள் (அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய இராச்சியம், கொழும்பு, யாழ்ப்பாணம்) ஒன்றிணைந்து மூன்று மாடிக் கட்டடம் ஒன்று நிறுவுவதென்று தீர்மானித்தார்கள். இந்தப் பணியின் நடைமுறைப் பொறுப்பை கொழும்பு பழைய மாணவிகள் சங்கத்திடம் ஒப்படைப்பதாக ஏகமனதாக மற்றைய சங்க உறுப்பினர்கள் தீர்மானித்தார்கள்.

கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கங்கள் தாம் எடுத்துக் கொண்ட நற்பணிக்கென சஞ்சிகை வெளியீடுகள் இராப்போசனத்துடன் கலை நிகழ்ச்சிகள் (கனடா சங்கம்), விளையாட்டு நிகழ்ச்சிகள், பொன்மாலைப் பொழுது (ஐக்கிய இராச்சியம்) நாதநர்த்தனம் கலை நிகழ்ச்சி மற்றும் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலை வருமானம் (யாழ்ப்பாணச்சங்கம்), புது உத்வேகத்துடன் மலரும் மாலை (அவுஸ்திரேலியா சங்கம்), மேலும் பாரிய நேரடிப் பணம் திரட்டுதல் ஊடாக (கொழும்புச்சங்கம்) கடந்த 20 மாதங்கள் அயராது உழைத்து நிதி சேகரித்தனர்.

இக்குறுகிய காலத்தில் தேவையான இலங்கை ரூபா 29 மில்லியன் என்ற இலக்கை நாம் அடைந்ததோடு மட்டுமல்லாமல் விடாமுயற்சியினூடாக எமது பணியை நிறைவேற்றியுள்ளதில் நாமும் யாழ் இந்து மகளிர் கல்லூரி சமூகமும் என்றென்றும் சிந்தித்து பெருமிதம் அடையும் நிலையில் உள்ளோம் என்றால் மிகையாகாது.

கணவர் விட்டுச்சென்ற பணிகளில் ஒன்று கல்லூரி நடுத்தோட்டப்பிள்ளையாரின் அருளால் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது "எடுத்த காரியத்தைப் பூர்த்தி செய்" என்ற வாக்கின் ஊக்கத்தினாலும் தாக்கத்தினாலும் உந்தப்பட்டு நான் உழைத்ததை இட்டு திருப்தியடையும் இத்தருணத்தில் கல்லூரியின் மாணவிகள், ஆசிரியைகள் ஆகியோரும் எதிர்காலத்தில் இதனால் மிகுந்த பயன் அடைய வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். இப்பணியின் வெற்றிக்கு அயராது உழைத்த சகலருக்கும் எங்கள் சங்கங்கள் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன்.

**திருமதி அபிராமி கைலாசபிள்ளை**
தலைவி
பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு
2017 செப்ரெம்பர்



# "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"
# தனி முயற்சிகளும் கூட்டு முயற்சிகளும்

யாழ் இந்து மகளிர் கல்லூரி 1993 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தனது 50ஆவது ஆண்டு நிறைவை இனிது கொண்டாடியது. அச்சமயம் கொழும்பு வாழ் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் ஒன்றிணைந்து கொழும்பு சங்கத்தை உருவாக்கினர். அன்றிலிருந்து இன்றுவரை யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு உறுப்பினர்கள் கல்லூரியின் தேவை அறிந்து அவ்வப் போது தம்மாலியன்ற உதவிகளை நல்கி வந்துள்ளனர்.

இனக்கலவரத்தின்போது கல்லூரி மிகுந்த பாதிப்படைந்து தேவையான அத்தியாவசிய உபகரணங்கள், தளபாடங்கள், பலவற்றை இழந்திருந்தது. அச்சமயம் அண்மையிலுள்ள கொழும்புச் சங்கம் கல்லூரி அதிபர்களுடன் தொடர்புகொண்டு ஆண்டு தோறும் சில உபகரணங்களை அன்பளிப்பு செய்து வந்துள்ளது. அவற்றுள் சில தமிழ் தட்டச்சுயந்திரம் (Tamil typewriter) , ஆங்கில தட்டச்சுயந்திரம்(English typewriter), பிரதி செய்யும் யந்திரம் (Photocopier), தொலைநகலி ( Fax machine) , ஒலிபெருக்கி (amplifier), சில விஞ்ஞான உபகரணங்கள் (Science apparatus), சில இரசாயனப்பொருட்கள் (Chemicals), கணினிகள் (Computer) , வாசிகசாலைப் புத்தகங்கள் (Library books), என்பனவாகும். கொழும்புச் சங்கம் ஒவ்வொரு ஆண்டும் கல்லூரியின் மிகத்திறமையான மாணவிக்கு (best student) பொன்விருது வழங்கி வருகின்றது. அத்துடன் திறமை மிக்க தேவையுள்ள மாணவிகளுக்கு பணஉதவி செய்து வருகின்றது. வருடந்தோறும் மலரும் "யாழ் நாதம்" சஞ்சிகைகொழும்புச் சங்க ஆவணமாகத் திகழ்கின்றது. இணையத்தளம் கல்லூரிப் பழைய மாணவிகளையும் நலன் விரும்பிகளையும் ஒன்றிணைத்து ஒரே குடும்பம் ஆக்குகின்றது.



கலைத்துறையில் சிறந்து விளங்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் திறமையை வெளிக்கொண்டு வருவதற்காக 20.06.1999 சனிக்கிழமை கொழும்பு இராமகிருஸ்ண மிஷன் மண்டபத்திலும், மீண்டும் 11.10.2003 சனிக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், கல்லூரி மாணவிகளையும், ஆசிரியைகளையும், பக்கவாத்தியக் காரரையும், அழைத்து நடன, நாட்டிய நிகழ்ச்சிகளை சங்கம் நடாத்தியது. இருமுறைகளும் கிட்டத்தட்ட 30 மாணவிகள் கொழும்புக்கு வருகை தந்து கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். கொழும்பு சங்கத்தில் காரியதரிசி, பொருளாளர், தலைவி, யாழ்நாத ஆசிரியை, என்னும் பதவிகளை வகித்து சங்க வளர்ச்சிக்கும் கல்லூரிக்கும் உதவுவதற்கு வாய்ப்புக் கிட்டியமையை எனக்கு ஒரு வரப்பிரசாதமாக கருதுகிறேன்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கங்கள்( அவுஸ்திரேலியா,கனடா,ஐக்கிய இராச்சியம், யாழ்ப்பாணம்) என்பன தனிச்சங்க முயற்சியாக பல வழிகளில் கல்லூரிக்கு உதவி வந்துள்ளன. தனிமுயற்சிகளின் விளைவு சிறிதாக இருக்கும். கல்லூரி தற்சமயம் கட்டடங்களை எதிர்பார்த்து இருக்கின்றது. ஏனெனில் கல்லூரியின் கட்டடங்கள் சில பழுதடையத் தொடங்கியுள்ளன. அத்துடன் மாணவிகளின் தொகைக்கு ஏற்ப கட்டட வசதிகள் இல்லை. ஒரு சங்கம் தனி முயற்சியாக கட்டடம் ஒன்றை நிறுவுவது கஷ்டமான காரியம்.

**"மனம் உண்டானால் இடம் உண்டு"**

எனவே யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கங்கள் ( அவுஸ்திரேலியா,கனடா, ஐக்கிய இராச்சியம், கொழும்பு, யாழ்ப்பாணம்) கூட்டு முயற்சியாக மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை நிறுவியுள்ளார்கள். அக்கட்டடத் திறப்பு விழாவில் பங்கேற்க எனக்கு வாய்ப்பளித்த நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையாரை வணங்கிக் கொண்டு அவரின் அருளால் யாழ் இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கங்கள் மேலும் பல கூட்டுமுயற்சிகளில் இணைந்து கல்லூரிக்குச் சேவை செய்ய வாழ்த்துகின்றேன்.

**திருமதி சிவகாமி அம்பலவாணர்**
கொழும்புச் சங்க உறுப்பினரும்
கல்லூரியின் நலன் விரும்பியும்
06.09.2017


பவளவிழா மண்டப அடிக்கல் நாட்டல்
27.08.2015



கொழும்பு பழைய மாணவர் சங்கம்



# இந்து மகளிர் கல்லூரி
# யாழ் பழைய மாணவிகள் சங்க போஷகரின்
# ஆசிச்செய்தி

" கேடில் விழுச் செல்வம் கல்வி" என்பதை நாடி நாளும் கல்விச் செல்வத்தைத் தேடி உழைக்கும் நல்லவர், வல்லவர் கூடி எழுப்பிய கலைக்கோயில் யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகும். சைவத் தமிழ் பெண்பிள்ளைகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி மிகக் குறுகிய காலத்திலேயே வித்தை, ஒழுக்கம் , சைவம், தமிழ், விஞ்ஞானம், இசை, மனையியல், விளையாட்டு என பலதுறைகளில் சிறந்து புகழ் பரப்பிய தோடல்லாமல் வெள்ளி விழா, பொன்விழா, வைர விழா என்பவை கண்டு பவளவிழா காண்பதற்கும் தயாராகி வருகின்ற இவ்வேளையில் உள்நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் வாழும் அன்னையின் புதல்விகளால் நிர்மாணிக்கப்பட்டு காணிக்கையாக்கப்படவுள்ள "பவளவிழா மண்டப" திறப்பு விழா சிறப்பு மலரான "சித்தம் அழகியர்" எனும் மலரிற்கு ஆசி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கல்லூரியின் மாணவியாக, ஆசிரியையாக, பழைய மாணவ சங்கத் தலைவியாக கல்லூரியின் வளர்ச்சி கண்டு உவகையடைந்த என்னை பழைய மாணவிகளின் கல்லூரி அன்னைக்கான இக்கைங்கரியம் மேலும் பூரிப்படையச் செய்கின்றது. இந்நேரத்தில் எனது சிறு பராயத்தை நினைத்துப் பார்க்கின்றேன். அக் கால கட்டங்களில் மலேசியாவில் இருந்து குடும்பத்துடன் நாடு திரும்பிய எனது தந்தையார் மலேசியாவில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற என்னையும், எனது ஆண் சகோதரர்களையும் சைவத் தமிழ் பண்பாட்டுச் சூழலில் கல்வி கற்பிப்பதற்காக யாழ் இந்து மகளிர் கல்லூரியையும் பரமேஸ்வராக் கல்லூரியையும் தேர்ந்தெடுத்தார். இவ்வாறே ஒவ்வொரு பெற்றோரும் தமது பெண்பிள்ளைகளின் கல்விக்காக அன்று எமது கல்லூரியை நாடி வந்தனர். இன்றும் வருகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் எங்கள் கலைக் கோயிலுக்கு பூதானம் வழங்கிய திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அம்மையார் அவர்களை நன்றியுடன் நினைவு கூராமல் இருக்க முடியாது. அவர் இல்லாமல் இக்கல்லூரி எங்கே? அவரின் தயாள சிந்தையைப் பின்பற்றிய எமது பழைய மாணவிகளும் தாம் கல்வி கற்ற கல்லூரி அன்னைக்கு நன்றிக்கடனை சரியான தருணங்களில் செலுத்தி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"வாழ்க பழைய மாணவர் பணி , வளர்க எமது கலைக்கோயில்"

**செல்வி புஸ்பா செல்வநாயகம்**
போஷகர், ஆலோசகர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ் இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



# அவுஸ்ரேலியா பழைய மாணவிகள் சங்க முன்னாள் போஷகரின் வாழ்த்துச் செய்தி

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட இப்பாடசாலைக் கட்டடம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதையிட்டு நான் பெருமிதம் கலந்த மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இவ் வெற்றிக்கு அயராது உழைத்த பழைய மாணவிகள் சங்கத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றியும் பாராட்டும்.

இவ்வாழ்த்து வரையும் வேளையில் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் மாணவியாகவும் ஆசிரியையாகவும் கழித்த நாட்களைப் பெருமிதத்துடன் அசைபோட்டுப் பார்க்கின்றேன்.

தமிழையும் சைவத்தையும் இரு கண்ணாகக் கொண்டு உருவாக்கபட்ட யாழ் இந்து மகளிர் கல்லூரி தனக்கென்று ஒரு குறிக்கோளையும் ஒரு பாரம்பரியத்தையும் தனக்கென ஒரு தனித்துவத்தையும் கொண்டுள்ளது. அறிவூட்டும் ஒரு ஆசானாகவும் செயற்திறனை கற்பிக்கும் இல்லமாகவும் கோட்பாடுகளைச் செழுமைப்படுத்தும் கூடமாகவும் கருத்துக்களைப் பரிமாறும் ஒரு களஞ்சியமாகவும் எமது கல்லூரி திகழ்ந்து வருகின்றது.

அதனுடைய குழந்தைகளான கொழும்பு,லண்டன், ஆஸ்திரேலியா, கனடா, யாழ்ப்பாணம், பழைய மாணவிகள் தமது தாயாருக்கு செலுத்த வேண்டிய நன்றியினை, இக்கட்டடத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்று இக்கட்டடம் கம்பீரமாகக் காட்சியளிக்க செய்துள்ளனர் என்பதை பெருமையுடன் கூற விரும்புகின்றேன். அதிலும் இக்கட்டடத்தை முன்னெடுக்க வேண்டுமென்பதில் கொழும்பு பழைய மாணவிகள் சங்க தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளையின் அயராத முயற்சிக்கு எனது மனமார்ந்த நன்றியும் பாராட்டும். பழைய மாணவிகளின் செயற்பாடுகளுக்கு தடைகள் ஏதும் கொடுக்காமல் ஒத்துழைத்த கல்லூரி அதிபருக்கும் எனது நன்றி.

எந்த ஒரு சமூகத்தின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் கல்வியே முக்கிய காரணியாகும். கல்வியை கற்பது மட்டும் போதாது கற்ற கல்வியின் நெறிப்படி வாழவும் வேண்டும். வள்ளுவர் வார்த்தைகளில் கூறுவதானால் "கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக"

எந்த ஒரு அநீதியையும் எந்த ஒரு பின்னடைவையும் கல்வி என்னும் ஆயுதம் மூலம் வெல்லலாம் என்பது எமது சமூகத்தின் காலம் காலமான நம்பிக்கை.

எமது சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் நிறைந்த கல்வியைப் பெற வேண்டுமென்றும் அதற்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி தொடர்ந்தும் பங்களிக்க வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி தவமணி விஸ்வநாதன்**
முன்னாள் போஷகர், பழைய மாணவிகள் சங்கம்
சிட்னி, ஆஸ்திரேலியா



# அவுஸ்ரேலியா பழைய மாணவிகள் சங்க போஷகரின் ஆசிச்செய்தி

உலகெங்கும் பரந்து வாழும் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் "பவளவிழா மண்டப" திறப்பு விழா சிறப்புற நிகழ எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க ஆஸ்திரேலிய கிளையினர் தொடர்ச்சியாக மலரும் மாலை நிகழ்வினை நடாத்தி கொழும்பு, கனடா, பிரித்தானியா, யாழ்ப்பாண பழைய மாணவிகள் சங்கத்தினருடன் இணைந்து இக்கட்டடத்திற்கான பங்களிப்பினை வழங்கியிருந்தனர். இவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

என் பெற்றோர் இருவரும் ஆசிரியர்களாக கடமையாற்றியமையால் 1948 தை மாதம் என்னை இந்து மகளிர் கல்லூரியில் விடுதி Matron அரவணைப்பில் விட்டுச் சென்றனர். சைவமும் தமிழும் நிறைவாக வரும்படி பாடசாலை பிள்ளையார் கோயில் சந்நிதியில் 4ம் வகுப்பு இருந்தது. 1948-1956 வரை, எமது கல்லூரியில் HSC வரை கற்றேன். எமது ஆசிரியர்களின் கற்பித்தல் நெறியால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்தது. இதற்கு வழி வகுத்தவர்கள் எமது கல்லூரியில் அதிபராக இருந்த சரோஜினிராவ், திருமதி விமலா ஆறுமுகம், செல்வி பத்மா இராமநாதன், அவர்களை நாம் சிரம் தாழ்த்தி பெருமைப்படுத்த வேண்டும். ஆசிரியர்களான இராதா சோமசுந்தரம் , மகேஸ்வரி கந்தையா (லண்டன்) திருமதி ஜெயவிக்கிரமாதனபாக்கியலட்சுமி தம்பு அவர்களையும் நான் நினைவுகூர விரும்புகின்றேன்.

இத்துடன் "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என வாழ்த்தி எமது கல்லூரி மாணவிகளின் தொடர்ச்சியான கற்றலுக்கு பேருதவியாக அமைக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டிட திறப்பு விழா சிறப்பாக நடைபெற உளப்பூர்வமான ஆசிகளை வழங்குகிறேன்.

கல்லூரி பழைய மாணவி, ஆசிரியை
**திருமதி சேதாம்பிகை சண்முகசோதி**
போஷகர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
ஆஸ்திரேலியா, சிட்னி

# JAFFNA HINDU LADIES COLLEGE

## Old Girls' Association Sydney

### வாழ்த்துச் செய்தி



போஷகர்:

திருமதி தவமணி விஸ்வநாதன்

உப போஷகர்கள்:

திருமதி சேதா சண்முகசோதி
திருமதி கனகாம்பிகை ஜெகநாதன்
திருமதி சாரதா கதிர்காமநாதன்
திருமதி இந்திரா கந்தசாமிப்பிள்ளை

தலைவர்:

திருமதி யோகா மதனராஜன்

உப தலைவர்:

திருமதி அஞ்சலா திவ்யகுமார்

செயலாளர்:

திருமதி ஸ்ரீ மாதங்கி சாந்தகுமார்

உப செயலாளர்:

திருமதி கீதா இ ரட்ணசீலன்

பொருளாளர்:

திருமதி சிவமதி விக்னராஜன்

உப பொருளாளர்:

திருமதி மாலினி இரட்ணம்

உறுப்பினர்கள்:

திருமதி கௌரி முருகானந்தன்
திருமதி கோபிகா வேலுப்பிள்ளை
திருமதி ராஜினி சிவகுமார்
திருமதி கிரிஜா இந்திரஜித்

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அனைத்து பழைய மாணவிகள் சங்கத்தினரது நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட "பவள விழா" மண்டபத்தின் திறப்பு விழா இனிதே நடைபெற வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்லூரியில் கல்வி கற்கும் மாணவிகளின் வளர்ச்சிக்கு கல்லூரியால் வளர்க்கப்பட்ட மாணவிகளின் பங்களிப்பே இந்த மூன்று மாடிக் கட்டடம். கல்லூரியின் வளர்ச்சிக்கு நீண்ட காலம் உறுதுணையாக நிற்கக் கூடிய ஒரு செயலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தப் பொறுப்பினை யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் கொழும்பு கிளைத் தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளையிடம் ஏக மனதாக ஒப்படைக்கப்பட்டது. அவரும் தனது தனிப்பட்ட வேலைகளை ஒதுக்கி விட்டு தன்னை இப்பணியில் முழுமையாக அர்ப்பணித்து, இன்று இக்கட்டடம் மிக விரைவாக முழுமை பெற்று நிமிர்ந்து நிற்பதற்கு பெரும் பங்கை வழங்கினார். அவருக்கு எனது உள்ளம் நிறைந்த பாராட்டினையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவருக்கு உறுதுணையாக ஆசிரியை செல்வி நிர்மலா சோமசுந்தரமும் அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களும் தம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்கினார்கள். அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அத்தோடு எமது ஆஸ்திரேலியா கிளை சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மிகுந்த ஈடுபாடும், அயராத உழைப்பும், சிறந்த செயல் திறனுடனும் செயல்பட்டனர். கட்டடத்திற்குத் தேவையான நிதியினை உரிய நேரத்திற்கு வழங்க என்னுடன் இணைந்து செயற்பட்டமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தற்போது கல்வி பயிலும் மாணவிகள் தாம் சார்ந்த கல்வித்துறையில் சிறப்பாக முன்னேறி, வரும் காலத்தில் கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் பழையமாணவிகளாக திகழ வேண்டும் என வாழ்த்தி "பவள விழா" மண்டபத்திறப்பு விழா இனிதே நிறைவேற எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி யோகா மதனராஜன்**
தலைவர், 2013-2015
யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம் - சிட்னி

# Malarum Malai



# JAFFNA HINDU LADIES COLLEGE

## Old Girls' Association Sydney

## வாழ்த்துச் செய்தி



போஷகர்:
திருமதி சேதா சண்முகசோதி

உப போஷகர்கள்:
திருமதி கனகாம்பிகை ஜெகநாதன்
திருமதி சாரதா கதிர்காமநாதன்
திருமதி இந்திரா கந்தசாமிப்பிள்ளை

தலைவர்:
திருமதி கலைச்செல்வி குஹஸ்ரீ

உப தலைவர்:
திருமதி ஸ்ரீ மாதங்கி சாந்தகுமார்

செயலாளர்:
திருமதி.சாந்தி உதயன்

உப செயலாளர்:
திருமதி கீதா இரட்ணசீலன்

பொருளாளர்:
திருமதி சிவமதி விக்னராஜன்

உப பொருளாளர்:
திருமதி ராஜினி சிவகுமார்

உறுப்பினர்கள்:
திருமதி கோபிகா வேலுப்பிள்ளை
திருமதி கிரிஜா இந்திரஜித்
திருமதி விஜித்தா விமலஸ்ரீ
திருமதி மேனகா கிருஷ்ணன்
திருமதி கமலாம்பிகை
பாலசுப்ரமணியன்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடும் கல்லூரி – எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடும் கல்லூரி "

இன்று இந்தப் பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவிகள் எல்லோரும் சேர்ந்து பவள விழா மண்டபம் ஒன்றைக் கட்டியெழுப்பி சாதனை புரிந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா, லண்டன் இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கங்கள் ஒன்றிணைந்து, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமையே பலம் என்பதனை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளன.

எமது பாடசாலை திறமைமிக்க மாணவிகளை மட்டும் உருவாக்கவில்லை. ஒற்றுமை, விடாமுயற்சி, பண்பாடு, சமூக நலனில் அக்கறை போன்ற குணவியல்புகளையும் புகட்டியுள்ளது என்பது, இந்த மூன்று மாடிக் கட்டிட வேலைகள் நிறைவேறியதன் மூலம் தெளிவாகியுள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரி - சிட்னிக் கிளையின் பழைய மாணவிகளாகிய நாம், 2002ம் ஆண்டில் "மலரும் மாலை" என்ற கலைநிகழ்ச்சியினைத் தொடங்கினோம். உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிப்பதுடன், எமது பாடசாலையின் தேவைகளையும் பூர்த்தி செய்வது என்ற நோக்குடன் , இருவருடங்களுக்கு ஒருமுறை இந்த நிகழ்ச்சியினை தொடர்ந்து நடாத்திவருகின்றோம். கடந்த மலரும் மாலை நிகழ்ச்சி மூலம் திரட்டப்பட்ட நிதியிலிருந்து பாடசாலைக்கு கணிணிகள் வழங்கியும், சிற்றுண்டிச் சாலை அமைத்துக்கொடுத்ததோடு , மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் புலமைப் பரிசில் நிதியம் ஒன்றினையும் நிறுவியிருக்கின்றோம்.

இவ்வேளையிலே, வளர்ந்துவரும் கல்லூரியின் கட்டட வசதி போதாக் குறையை நிவர்த்தி செய்ய, மூன்று மாடிக்கட்டிடம் ஒன்றினை உருவாக்குவதென்று, ஐந்து பழைய மாணவிகள் சங்கங்கள் ஒன்றிணைந்து முடிவு செய்தோம்.

இந்தப் பொறுப்பினை, யாழ். இந்து மகளிர் கல்லூரியின் கொழும்புக் கிளைத் தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளை அவர்கள் மன மகிழ்வோடு ஏற்றுக்கொண்டார். அவரது ஊக்கத்தினையும், பணியையும் மிகவும் பாராட்டுவதோடு, அவருக்கும்; அவருக்கு மிகவும் உறுதுணையாக நின்ற கல்லூரி ஆசிரியை செல்வி.நிர்மலா சோமசுந்தரம், கல்லூரி அதிபர் மிமலாதேவி விமலநாதன் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இந்தக் கட்டிடப் பூர்த்திக்காக $50,000 களினை (இல. ரூபா 5,240,000.00) நாம் எமது மூன்று மலரும் மாலை நிகழ்ச்சிகள் மூலம் திரட்டியனுப்பினோம். பழைய மாணவிகள் சங்கங்கள் இணைந்து உருவாகிய இந்த மூன்று மாடிக் கட்டிடம் பவளவிழா மண்டபமாக அமைவது எமக்கு மிகவும் பெருமையைத் தருகின்றது. இந்த பவளவிழா மண்டபத் திறப்பு விழா சிறப்பாக நடக்க, எமது சங்கத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன். எமது கல்லூரியின் புகழ் மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி
திருமதி கலைச்செல்வி குஹஸ்ரீ
தலைவர் 2015-2017
யாழ். இந்து மகளிர் கல்லூரி - பழைய மாணவிகள் சங்கம்-சிட்னி


JAFFNA HINDU LADIES' COLLEGE
CANADA
25th
Anniversary
puthinamphotos.com



# கனடா பழைய மாணவிகள் சங்க போஷகரின் உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்

எங்கள், யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா ஐக்கிய இராச்சியம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இச்சங்க உறுப்பினர்களின் அளப்பரிய முயற்சியினால் வகுப்பறைகள், மண்டபம்,அரங்கு உள்ளடக்கிய மூன்று மாடிக் கட்டடம் "பவள விழா மண்டபமாக" 2017 செப்ரெம்பர் 6ஆம் திகதி திறப்பு விழா காண்கின்றது. பவள விழாக் காணும் "யாழ் நகர்க் கணியாக திகழ்ந்திடும்" கல்லூரித் தாயக்கு பார் எங்கும் பரவியுள்ள பழைய மாணவிகள் ஒருங்கிணைந்து உவந்து அளிக்கும் வெகுமதியே பவளவிழா மண்டபமாகும். இது அரிய சாதனை ஆகும்.

மாண்புமிக்க விசாலாட்சி சிவகுருநாதனின் தயாள சிந்தனையால் உருவாகியது எங்கள் கல்லூரி. இக்கல்லூரியினால் உருவாக்கப்பட்ட மாணவிகளும் தயாள சிந்தனை உடையவராய் கல்லூரியின் உயர்ச்சியே எங்களினது இலட்சியமென உறுதி கொண்டு ஆக்கபூர்வமான பல நற்பணிகள் செய்து வருகின்றனர். இவர்களினது ஊக்கத்திற்கு ஈடாகக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், மாணவிகள் ஆகிய யாவரும் கல்லூரியின் தரம் உயரக் கடினமாக உழைக்க வேண்டுமென்பது எங்களின் தாழ்மையான வேண்டுகோளாகும்.

இப்பவள விழா மண்டபத்தை நிர்மாணிப்பதில் மிகவும் அர்ப்பணிப்புடன் முன்னின்று உழைத்த கொழும்பு யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கத் தலைவியும் சமூக சேவகியுமான திருமதி அபிராமி கைலாசபிள்ளை மிகவும் போற்றற்குரியவராவார்.பல சவால்களின் மத்தியிலும் தான் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பணியை இனிது நிறைவேற்ற, வேண்டிய நிதியை முற்பணமாகக் கொடுத்துதவிய பெருமைக்குரியராவார். அவருக்கு எங்கள் மனப்பூர்வமான பாராட்டுக்கள்.

எங்கள் கல்லூரியின் இன்றைய அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் தனது ஆதரவைச் சிறப்பாக வழங்கிய பெருமையுடையவர். சகல சங்கங்களுடனும் தொடர்பு கொண்டு தகவல்கள் பரிமாறி நாம் மேற்கொண்டுள்ள பணியின் நிலைமையை காலத்துக்குக் காலம் அறியத் தந்த பெருமைக்குரியவர் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் பொருளாளரும், கல்லூரியின் ஆசிரியையுமான நிர்மலா சோமசுந்தரம் ஆவார். அவரின் சேவை பவளவிழா மண்டபம் சிறப்பாக அமைய மிகவும் வேண்டியதாக விளங்கியது என்பது மிகையாகா. பவள விழா சிறப்பாக நடாத்த முன்னின்று உழைக்கும் யாழ் பழைய மாணவிகள் சங்கத்தினரின் சேவை மகத்தானது.

பவள விழா மண்டபத் திறப்பு விழா மிகவும் சிறப்பாக நடைபெற எங்கள் கல்லூரியின் குலதெய்வமாகிய இராஜவரோதய விநாயகர் அருள் வேண்டி எங்கள் கனடா பழைய மாணவிகள் சங்கத்தின் சார்பில் என் உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

**செல்வி நல்லம்மா குழந்தைவேலு**
ஸ்தாபகர், போஷகர்
யாழ் இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கம்
கனடா (பழைய மாணவி முன்னாள் ஆசிரியை)



# பழைய மாணவிகள் சங்க கனடா கிளைத் தலைவியின் வாழ்த்துச் செய்தி

பவள விழா! எமது கல்லூரியின் பவள விழா! நினைத்தாலே உள்ளம் உவகை அடைகின்றது. புலம் பெயர்ந்து திக்குத் திசை தெரியாமல் ஓடி வந்த நாம், எமது உறவுகள், நண்பர்கள், சொத்துக்கள் எனப்பலவற்றையும் இழந்து நின்றோம். ஆனால் எம் இளம் பராய இன்பமான நினைவுகளை குறிப்பாக எம் நினைவை விட்டு நீங்காத பாடசாலை அனுபவங்களை ஒன்று திரட்டி, மீட்டு எம்மை இன்றும் எம் நாட்டுடன் இணைத்து வைத்திருப்பது நாம் கல்வி கற்ற எம் பாடசாலைதான்.

இன்று எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி, புதிய 3 மாடிக் கட்டடத்துடன் மேடை அரங்கையும் புதிதாகக் கொண்டு பவள விழா கொண்டாடுகின்றது என நினைக்கும்போது இதற்காக எமது கல்லூரி பழைய மாணவிகள் செய்த பங்களிப்புக்களை மெச்சாமல் இருக்க முடியவில்லை. இதில் குறிப்பாக யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கனடாக்கிளையின் தற்போதைய, முன்னாள் உறுப்பினர்களின் பங்களிப்பு மிகவும் அளப்பரியது. இதற்காக எமது கிளை கலைவிழா, இராப்போசன விருந்து, படக்காட்சிகள் எனப் பல வழிகளிலும் நிதி சேகரித்தனர். இது எமது கனடா கிளை எப்போதும் எமது கல்லூரிக்கு தம்மாலான உதவிகளை செய்யும் என்பதை மீண்டும் உணர்த்தியுள்ளது.

இதுமட்டுமல்லாது, எமது போஷகர் செல்வி நல்லம்மா குழந்தைவேலு பல பழைய மாணவிகளையும் நலன்விரும்பிகளையும் தொடர்புகொண்டு தன்னாலான நிதியைத் திரட்டினார். அவருக்கும் எமது கிளையின் உறுப்பினர்களுக்கும் இந்த மண்டபத்தை சிறப்பாக அமைத்து பவள விழா கொண்டாட உறுதுணையாக இருந்ததற்காக சங்கத்தின் தலைவி என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் கனடாக் கிளையில் தலைவியாக இருக்கும் காலத்தில் எமது கல்லூரி பவளவிழா கொண்டாடுகின்றது என்பதை எண்ணி மிகவும் பெருமிதம் கொள்கின்றேன். இவ்விழா சிறப்பாக அமைய இறைவனை வேண்டி இதற்காக உழைத்த அனைவருக்கும் விழா ஒருங்கிணைப்பாளருக்கும், நன்றியும் வாழ்த்துக்களும் கூறி நிறைகின்றேன்.

**தேவகி முனீஸ்வரராஜா**
தலைவர், யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா



# பழைய மாணவிகள் சங்க ஐக்கிய இராச்சிய கிளைத் தலைவியின் வாழ்த்துச் செய்தி

யாழ் மண்ணில் கல்வியோடு சேர்த்து கலை மற்றும் கலாசாரத்தையும் வளர்க்கும் நோக்கத்தோடு இயங்கி வரும் கல்லூரிகளில் ஒன்று எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி. இந் நோக்கத்தில் எமது கல்லூரி முன்னேறிச் செல்வதற்குத் தேவையான பௌதீக வளங்களை, வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பழைய மாணவிகளாகிய எமது கடமையாகும். இதனை கருத்தில் கொண்டு கல்லூரியின் வகுப்பறைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக கட்டப்பட்ட வகுப்பறைத் தொகுதியும், அரங்குடன் கூடிய மண்டபமும் கல்லூரியின் பவளவிழா ஞாபகார்த்தமாக "பவளவிழா மண்டபம்" எனப்பெயர் சூட்டப்பட்டு கல்லூரித் தாய்க்கு சமர்ப்பணமாவது மிகவும் மகிழ்வைத் தருகின்றது. மேலும் பவளவிழா மண்டப திறப்பு விழாவையொட்டி வெளியிடப்படும் "சித்தம் அழகியர்" எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய இராச்சிய தலைவராக 2015ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட அதே சமயம், இந்த மூன்று மாடி வகுப்பறை கட்ட தீர்மானம் எடுத்திருந்தார்கள். யாழ் இந்து மகளிர் கல்லூரியின் கொழும்பு கிளையின் தலைவர் திருமதி அபிராமி கைலாசபிள்ளையின் தலைமையில் பழைய மாணவர் சங்கங்களான யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம் ஆகியோரின் நிதிப் பங்களிப்புடன் இத்திட்டம் இன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எமது கல்லூரியின் அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களும் இந்த கட்டடத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தார். யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் செல்வி நிர்மலா சோமசுந்தரம் அவர்கள் லண்டன் பழைய மாணவர் சங்கத்திற்கு வருகை தந்து மதிப்பிடப்பட்ட செலவு அறிக்கையையும் திட்டமிடல் பற்றியும் விரிவாக விளக்கினார்.

இதன் முதற்கட்டமாக லண்டன் பழைய மாணவர் சங்கம் நிதிசேகரிக்கும் முகமாக முதன் முறையாக வலைப்பந்தாட்ட போட்டிகளை 2015,2016 ஆம் ஆண்டுகளில் மிகவும் வெற்றிகரமாக நடத்தியது. இதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சி இராபோசனவிருந்து என்று நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நிதி திரட்டியது. மேலும் 27ம் திகதி ஆகஸ்ட் மாதம் 2015ம் ஆண்டு இந்த மண்டபத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கு பற்ற எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இன்று அதே பவள விழா மண்டபத்தின் திறப்பு விழாவில் கலந்து கொள்வதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன்.

" வாழ்க யாழ் இந்து மகளிர் பழைய மாணவிகள் சேவை–
உம்மால் என்றென்றும் வெல்லும் யாழ் இந்து மகளிர் அன்னை"

**திருமதி ஆனந்தலக்ஷ்மி ஞானசம்பந்தன்**
தலைவர் 2015 - 2017
Founder Member - 1993
Committee Member - 1993 - 2017
யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் UK



# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி (ஐக்கிய இராச்சியம்)

பிரித்தானிய நாட்டில் இயங்கிவரும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் இந்த அறிக்கையை " சித்தம் அழகியர்" என்ற மலருக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல நிரந்தர அங்கத்தவர்களை கொண்டு இங்கு இயங்கி வரும் இச்சங்கத்தை வழிநடத்தும் பாரிய பொறுப்பு 2015ம் ஆண்டு எமது நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. எமது சங்கம் 2015,2016ம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் தமிழ்த்தின போட்டிகளில் (சங்கீதம், நடனம், தமிழ்) பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசில்களை வழங்கி அவர்களை ஊக்குவித்தது.

மேலும் வலைப்பந்தாட்ட போட்டியை முதன்முறையாக நடாத்திய பெருமை இச்சங்கத்தையே சாரும். இந்த வலைப்பந்தாட்டப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், இராப்போசனவிருந்து என்று தொடர்ந்து 2015,2016ஆம் ஆண்டுகளில் மிகவும் வெற்றிகரமாக நடாத்தியதில் திரட்டிய நிதியை இக்கட்டிடத்தை கட்டுவதற்கு உதவியதில் நாம் பெருமையடைகின்றோம்.

இச்சங்கத்தின் சார்பில் "பவளவிழா மண்டபம்" திறப்பு விழா சிறப்பாக நடைபெற வாழ்த்திக் கொண்டு இனிமேலும் தமது ஒத்துழைப்பை பழைய மாணவிகள் எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் எமது கல்லூரி வளாகத்தில் உள்ள விநாயகப் பெருமானை வணங்கி அன்புடன் வாழ்த்துகின்றேன்.

வாழ்க யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி!
வளர்க அதன் புகழ் !

அன்புடன்
**திருமதி ரஜனி சுபேந்திரன்**
செயலாளர், 2013- 2017
யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் UK
அங்கத்தவர், 1993 - 2017







# யாழ் பழைய மாணவிகள் சங்க செயலாளரின் வாழ்த்துச்செய்தி

எமது கல்லூரி யாழ் மாவட்டத்தில் நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தையும், சிறந்த இந்து தமிழ்ப் பண்பாட்டையும் கொண்டு விளங்கும் பெண்களுக்கான தனித்துவமான கல்லூரியாகும். பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் சகல நடவடிக்கைகளுக்கும் பக்கப்பலமாக நின்று செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் கல்லூரியின் பௌதீகவளத் தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்வதற்காக "பவளவிழா மண்டபம்" எனும் வகுப்பறைத் தொகுதி எமது சங்கங்களின் ஒன்றிணைந்த பங்களிப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது. கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களின் அத்தியாவசிய தேவையை அறிந்து மிக விரைவாக இச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டமை சிறப்பிற்குரிய விடயமாகும்.

இக்கட்டடத் தொகுதி உருவாக்கத்திற்குத் கல்லூரியின் பழைய மாணவர்களின் பங்களிப்பு மகத்தானதாக விளங்குகின்றது. கொழும்புக் கிளைத் தலைவி. திருமதி அபிராமி கைலாயபிள்ளை அவர்கள் அனைத்துக் கிளைச்சங்கங்களையும் ஒன்றிணைத்து இச்செயற்பாட்டை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். எமது சங்கமானது யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பழைய மாணவர்களையும் இணைத்து "நாத நர்த்தனம்" எனும் நிதியுதவிக் கலைநிகழ்வை வீரசிங்கம் மண்டபத்தில் 2016ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடாத்தியது. இதன் மூலம் எமக்குக் குறிப்பிட்டளவு நிதி கிடைத்தது. அத்தோடு யாழ் பழைய மாணவர் சங்கத்தினால் கல்லூரியில் நடாத்தப்படும் சிற்றுண்டிச் சாலையில் இருந்து பெறப்படும் வருமானம் மற்றும் கல்லூரி மீது கொண்ட பற்றுக் காரணமாக பழைய மாணவர்களால் வழங்கப்பட்ட நேரடி நிதிப் பங்களிப்பு என்பன எமது செயற்பாட்டுக்கு துணை நின்றன. இன்று கல்லூரி வளாகத்திலே கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் "பவளவிழா மண்டபம்" அனைத்துப் பழைய மாணவர்களின் ஒன்றிணைவின் தார்ப்பரியத்தையும், கல்லூரி அன்னையின் மேல் மாணவர்கள் கொண்ட அன்புப் பிணைப்பின் வலிமை, நன்றியுணர்வு என்பவற்றையும் எடுத்தியம்பி நிற்கின்றது. இக்கட்டடத்தை பார்க்கின்ற போது கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களினது நெஞ்சத்திலும் தாங்களும் கல்லூரித்தாய்க்கு என்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினை இது பதிய வைக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.


இக்கட்டடத் தொகுதியின் உருவாக்கத்திற்கு உறுதுணையாக இருந்த கல்லூரிசார் அனைத்து அன்புள்ளங்களுக்கும் தாய்ச்சங்கத்தின் சார்பாக நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம். யாழ் இந்து மகளிர் கல்லூரி தரணியில் தலைநிமிர்ந்து நிற்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவோம் என்று இன்றைய நாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

**திருமதி க விமலநாதன்**
செயலாளர்
யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கம்
யா / யாழ் இந்து மகளிர் கல்லூரி

# 1945





CLASS ROOMS - WESTERN BLOCK



CLASS ROOMS - EASTERN BLOCK




THE MANAGING COMMITTEE OF THE JAFFNA HINDU COLLEGE BOARD




THE MAIN BLOCK



THE STAFF 1943

# இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண் கல்வியும் இந்து மகளிர் கல்லூரியின் தோற்றமும்

எமது வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் பெற விழையும் செல்வங்கள் பல. அவற்றுள் நிலையானதாக எவ்வித தாக்கங்களினாலும் தகர்க்க முடியாததாக விளங்குவது கல்வி என்னும் செல்வம் ஒன்றே ஆகும். ஏனைய செல்வங்கள் அத்தகுதிக்குரியன எனக்கொள்ள முடியாது. மனிதனாகப் பிறந்தவனுக்கு பெருமிதத்தை தேடித் தருபவற்றுள் தலையாயது கல்வி ஆகும்.

" கல்வி தறுகண் இசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" என்பது தொல்காப்பியருடைய கூற்று. மனித இனத்தின் தோற்றத்தின் தொடக்கத்தில் இருந்து அதன் வளர்ச்சியோடு இணைந்து கல்வியும் வளர்ந்து உள்ளதை வரலாறு காட்டுகின்றது. காலத்திற்கு காலம் மக்களின் சமூகத்தின் தேவைகளைப் பொறுத்து கல்வியின் நோக்கங்களிலும் வழங்கலிலும் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டன.

ஒரு தனிநபரோ, சமூகமோ, நாடோ, முன்னேற வேண்டுமாயின் கல்வி அவசியமாகும். இவ்வாறு கல்வியின் முக்கியத்துவம், அவசியம் நோக்கங்கள் பற்றிய விளக்கம் கணிசமான அளவு ஏற்பட்ட பின்பும் பெண் கல்வியானது 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. மேலும் அக்கால கட்டத்தில் இலங்கை முழுவதும் எழுத்தறிவற்றிருந்த பெண்களின் விகிதாசாரத்தைப் பின்வரும் விபரத்தில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

இலங்கை முழுவதும் படிப்பறிவற்றோர் வீதம்

| - | 1901 | 1911 | 1921 | 1946 |
|---|---|---|---|---|
| ஆண்கள் | 58.0 | 52.8 | 43.7 | 29.9 |
| பெண்கள் | 91.5 | 87.5 | 78.8 | 56.2 |

ஆதாரம்:- கல்வி நூற்றாண்டு மலர்

இவ்விபரத்தில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிகளில் யாழ்ப்பாணத்திலும் படிப்பறிவற்ற பெண்கள் தொகை கணிசமானதென்பதை நாம் ஊகிக்கக் கூடியதாயுள்ளது.

இக்கால கட்டத்தில் தோற்றம் பெற்ற யாழ் இந்து மகளிர் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள், பங்களிப்புகள் யாவும் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே பெரும் பங்கேற்றுள்ளதால் அக்காலகட்டத்திலும் அதற்கு முன்னரும் யாழ் நகரில் நிலவிய பெண் கல்வி நிலைப்பாட்டை சற்றே திரும்பிப் பார்ப்போம்.

## பெண் கல்வி பின்தங்கியமைக்கான காரணங்கள்

பெண்களின் கல்வி பின்தங்கியமைக்கு சமூகத்தின் மரபுரீதியான பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளுமே காரணமாயிருந்தன. குறிப்பாக வளர்முக நாடுகளில் சமூக அமைப்பு முறையே பெண் கல்வி பினதங்கியமைக்கு காரணம் ஆகும். இலங்கையைப் பொறுத்தளவில் குறிப்பாக இந்துக்குடும்பங்கள் பின்பற்றிவந்த ஆசார, அனுட்டானங்கள், பண்பாடுகள் பெண்களுக்கு கூடிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தின. பெண்கள் குடும்ப வேலைகளில் அனுபவம் பெற்றுக் குடும்பத்தை வீட்டில் நிர்வகிப்பது அவசியமானது, போதுமானது என்ற கொள்கையே சமூகத்தில் நிலவி வந்தது. அக்கால

பொதுமக்களின் கல்வியின் நோக்கம் உத்தியோகம் ஒன்றைப் பெறுவதையே அடிப்படையாகக் கொண்டிருந்தமையாலும் ஒரு குடும்பத்தில் ஆணே அதற்குத் தேவையான வருமானத்தைப் பெற உழைப்பவராக இருந்தமையாலும் பெண்கள் கல்வி கற்று உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற நிலை இருக்கவில்லை. மேலும் அக்கால சமூக அமைப்பில் ஆண் தலைமைத்துவப் போக்கே குடும்பங்களில் ஆதிக்கம் செலுத்தியதெனலாம்.

## மிஷனரிமாரின் பெண் கல்வி பற்றிய உணர்வும் நோக்கமும்

இத்தகைய ஒரு கலாசார பண்பாடான வாழ்க்கை முறையை கடைப்பிடித்து வந்த சமூகத்தில் மிஷனரிமாரின் வருகை சில மாற்றங்களை ஏற்படுத்தியது. அவர்களின் வருகையும் அதனால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் இருபதாம் நூற்றாண்டுக்கு முந்திய நூற்றாண்டுகளிலேயே ஏற்பட்டு விட்டது. குருகுலமுறையில் அமைந்திருந்த எங்கள் நாட்டுக் கல்விமுறை பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் வருகையுடன் மாற்றங்களுக்கு உள்ளாகியது. போர்த்துக்கேயரே இலங்கையில் பாடசாலை கல்வி முறையை ஆரம்பித்தனர். தமது வர்த்தகமும் மதமும் பரப்புவதற்கு இப்பாடசாலைகளை நிலைக்களங்களாகவும் கல்வியை ஒரு ஊடகமாகவும் பயன்படுத்தினர். இவர்களைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தரின் நோக்கங்களும் கல்விமுறையும் இதுவாகவே இருந்தன. அவர்களைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயரும் ஏறக்குறைய 50ஆண்டுகள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் உடைய முறைகளினின்றும் வேறுபடாததுமான அத்துடன் எவ்வித திட்டமுமில்லாத கல்வி முறையைப் பின்பற்றினர்.

1815இல் கண்டி இராச்சிய வீழ்ச்சியின் பின் இலங்கை முழுவதும் ஆட்சிப் பொறுப்பேற்ற ஆங்கிலேயர் தமது அரச நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்காக எழுதுவினைஞர்களையும் அதற்கு குறைந்த தரத்தில் உள்ள உத்தியோகத்தரையும் தமது பாடசாலைகளின் மூலமும், கல்வி மூலமும் சுதேசிகளிடமிருந்து உருவாக்குவதே தமது மூன்றாவது நோக்கமாகக் கொண்டிருந்தனர்.இதன் காரணமாக பல ஆரம்ப இடைநிலை பாடசாலைகளை நிறுவி கல்வி வழங்கினர்.

மேலும் தமது மதத்தைப் பரப்பும் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஆண்களுக்கு மட்டும் கல்வி போதித்தால் போதாது பெண்களுக்கும் கல்வியளிக்க வேண்டும் என்ற சிந்தனை அவர்கள் மத்தியில் உருவாகியது. தமது கிறிஸ்தவ மதத்தை குடும்பங்களுள் இலகுவாக பரப்புவதாயின் ஆண்களை விடப் பெண்களே வாய்ப்பானவர்கள் என்ற உண்மையை அவர்கள் புரிந்துகொண்டார்கள். அதனால் போலும் "ஆறு ஆண்களை மதம் மாற்றுவதிலும் பார்க்க ஒரு பெண்ணை மதம் மாற்றுவது மிகுந்த பயனுள்ளதாகும்"[1] என ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் யாழ் மாவட்டத்தின் நாற்பது பாடசாலைகளின் உபதேசியாராயிருந்தவரான கிறிஸ்ரியன் டேவிட் கூறியுள்ளார். ஒரு பெண்ணை மதம் மாற்றுவதன் மூலம் அவர்கள் பிள்ளைகள், உறவினர் ஆகியோரை மதம் மாற்றுவதற்கு இவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தலாம் எனக் கருதினர். இக்காரணங்களை மையமாகக் கொண்டே C.M.S எனப்படும் கோவில் மிஷனரிமார் சங்கம் (இங்கிலாந்து திருச்சபை) W.M.S. எனப்படும் வெஸ்லியன் மிஷனரிச் சங்கமும் A.M.S எனப்படும் அமெரிக்கன் மிஷனரிச் சங்கமும் யாழ்ப்பாணத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரிகளையும், உடுவிலில் உடுவில் மகளிர் கல்லூரியையும் உடுப்பிட்டியில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையையும், பருத்தித்துறையில் மெதடிஸ் மகளிர் கல்லூரியையும் நிறுவி கல்வி வழங்கினர். இவற்றை விட கத்தோலிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் போன்ற பாடசாலைகளையும் நிறுவினர். யாழ்ப்பாண சைவ மக்கள் மத்தியில் பெண்களுக்கான சமூக கட்டுப்பாடுகளை உணர்ந்து தனிப் பெண்கள் பாடசாலைகளாக நிறுவப்பட்ட இப்பாடசாலைகளில் மதப் பிரசாரத்தை இலகுவாக்க தாய்மொழி மூலம் ஆரம்பக் கல்வி வழங்கப்பட்டது.

## மிஷனரிமாரின் பாடசாலைகள் ஏற்படுத்திய திருப்பம்

இப்பாடசாலைகளில் சாதிபேதம், பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூக ஏற்றத்தாழ்வு ஆகியவை காட்டப்படாமையால் பல வறிய மக்கள் பாடசாலைகளில் சேர்ந்து கல்வி கற்றதுடன் மதம் மாறினர். இவர்களது இடைநிலைப் பெண்கள் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியுடன், கிறிஸ்தவ மதமும் கலாசாரங்களும் போதிக்கப்பட்டன. அங்கு கல்வி கற்ற தமிழ்ப் பெண்கள் கிறிஸ்தவ மத கலாசாரங்களை மனதால் ஏற்காவிட்டாலும் அவர்களின் நடைமுறைகளுக்கு தம்மை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் காலப்போக்கில் எமது தமிழ்ப் பெண்கள் எமது இந்து சமயம் பற்றிய அறிவு குறைந்தவர்களாகவும் மேலைத்தேய கலாசாரங்களை கூடுதலாகப் பின்பற்றுபவர்களாகவும் அதனால் எமது பண்பாட்டை படிப்படியாக மறந்தவர்களாகவும் இருந்தனர். ஆனால் அக்கால மக்களில் அதிகமானோர் தமது சமயக் கொள்கைகளிலும் நம்பிக்கைகளிலும், தமிழ்ப்பண்பாட்டிலும் அதீதமான பற்றுக் கொண்டவர்களாக இருந்தனர். இதனால் தமது பெண்பிள்ளைகளை கிறிஸ்தவ மத கலாசார சூழலில் கல்வி கற்க அனுப்புவதற்கு அவர்கள் விரும்பவில்லை. எழுத வாசிக்கக் கூடிய ஆற்றலைப் பெறுவதற்காக அப்பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை அனுப்பிய பெற்றோர்கள் கூட தம் பிள்ளைகளின் கல்வியை ஆரம்பக் கல்வியுடன் இடை நிறுத்தினர்.

அத்துடன் கிறிஸ்தவர்களின் இவ்வித செயல்கள் தமக்கு ஒவ்வாதவை என்ற விழிப்புணர்வை சைவ மக்கள் சிலர் பெற்றிருந்தமையால் அவர்களுடைய மறைமுகமான எதிர்ப்பு நடவடிக்கைகளும் பல பெற்றோர்களைத் தடுத்திருக்கலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அக்கால மக்களின் பெரும்பான்மையோர் பெண்கள் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை உணராதிருந்தமையினாலேயே தம் பெண்பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பாதிருந்தனர் எனக் கூறலாம். இக்காரணங்களினால் யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான இந்துக்குடும்பங்களைச் சேர்ந்த பெண் பிள்ளைகள் கல்வி கற்காதவர்களாகவும், கல்வி அறிவு குறைந்தவர்களாகவுமே இருந்தனர். இதனைப் பின்வரும் தரவுகளிலிருந்து அறிய முடிகின்றது.

**மாணவர் தொகை**

| பாடசாலை | 1913 | 1922 | 1937 | 1946 | 1950 |
|---|---|---|---|---|---|
| வேம்படி மகளிர் கல்லூரி | 172 | - | 236 | - | 500 |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 214 | - | - | 525 | 700 |
| திருக்குடும்ப கன்னியர் மடம் | - | 300 | 450 | 566 | - |

ஆதாரம் :- அவ்வப் பாடசாலை சஞ்சிகைகள்

## விழிப்புணர்வு

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அந்நியர் ஆட்சியில் சைவமும், தமிழும் நலிவடைந்திருந்த ஒரு கால கட்டத்தில் இவ்விரண்டையும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் இந்துக்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டிருந்தது. அவ்விழிப்புணர்வின் தளபதியாக ஆறுமுகநாவலர் அவர்களைக் காலம் ஆக்கியது.

"நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே – எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை" – சி.வை.தாமோதரம்பிள்ளை

மிஷனரிமார்களின் ஆங்கில மொழிமூலக் கல்வியையும் அதனால் அரச உத்தியோகங்களைப் பெறும் வாய்ப்பையும் பயன்படுத்தி இந்துக்களை மதம் மாற்றுவதைத் தடுக்கவும், சைவசமயச் சூழலில் அக்கல்வியைப் போதிக்கவும் கூடியதாக நாவலர் பெருமான் 1872ஆம் ஆண்டில் வண்ணார் பண்ணையில் சைப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் பாடசாலையொன்றை நிறுவினார். ஆனால் இப்பாடசாலை அரசின் உதவி இன்மையாலும் அக்காலத்தில் வழக்கிலிருந்த "கால் மைல் எல்லைக்குள்" கில்னர் பாடசாலை இருந்தமையை சாட்டாகக் கொண்டும் தொடர்ந்து இயங்காமற் போயிற்று. எமது சமூகத்தவர் தொடர்ந்தும் மிஷனரிமாரின் பாடசாலைகளிலேயே தமது கல்வியைத் தொடர வேண்டிய நிலை இருந்தது.

இக்காலகட்டங்களில் இவை போன்ற கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி கற்று இங்கிலாந்து போன்ற மேலைத்தேசங்களுக்கு சென்று உயர் கல்வி பெறும் வாய்ப்பை எம்மவரில் சிலர் பெற்றிருந்தனர். கல்வியில் அவர்கள் பெற்ற முன்னேற்றமும் அறிவும் வெவ்வேறு இனமத மக்கள் பற்றிய அறிவும் அவர்களுடைய சிந்தனையை விசாலிப்படையச் செய்ததுடன் தம் தேசம், இனம் ஆகியவை பற்றி சிந்திப்பதற்கும் தூண்டின. அதாவது தமக்கென்று ஒரு மொழி உண்டு, ஒரு கலாசாரம் உண்டு, நாகரிகம் உண்டு என்ற உணர்வை அவர்கள் பெற்றனர். இதனால் தமது தாய்நாடு திரும்பியதும் தங்கள் சிந்தனைகளுக்கு வடிவம் கொடுக்கும் முறையில் செயல்பட முனைந்த எம்மவரில் முக்கியமானவர் சேர்.பொன் இராமநாதன் அவர்களாவார்.

'ஒருவரின் வாழ்வின் பெரும்பகுதி சமயம் தொடர்பான செயற்பாடாகும். உதாரணமாக நீதி, தர்மம், அகிம்சை போன்றவையாகும். இதனால் ஒரு பிள்ளையின் உருவாக்கத்தில் உந்து சக்தியாக இருக்க வேண்டியது சமயம் என்பதிலும், பிள்ளையின் சமய நம்பிக்கைகளில் கோட்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படின் கல்வியின் குறிக்கோளே கருத்திழந்து விடும்." [2] என்பதிலும் சேர்.பொன் இராமநாதன் அவர்கள் மிகுந்த நம்பிக்கை உள்ளவராயிருந்தார்.

ஆனால் அன்றைய கிறிஸ்தவ பாடசாலைகளில் மதவேறுபாடுகள் பெருமளவில் பாடசாலை நிர்வாகத்தினரால் மாணவர் மீது காட்டப்பட்டன. கிறிஸ்தவராக மாறிய மாணவர்களுக்கு கூடுதலான வாய்ப்புக்களும் சலுகைகளும் வழங்கப்பட்டன. சமுதாயத்தின் மேல் மட்டத்தினர் பணபலத்தினால் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றனர். இவ்வாறு கல்வி கற்று வெளியேறியோர் தமது சமூகத்துடனேயே பொருந்தி வாழ முடியாத குழவினராக வாழத் தலைப்பட்டனர். எனவே இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் காணப்பட்ட கிறிஸ்தவப் பாடசாலைகள் தமிழ், இந்துப் பெண்கள் கல்வி கற்று தமது சமூகத்தை மேம்படுத்தக் கூடிய வகையிலான தொழிற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை என்றே கூற வேண்டும்.

இவ்விதமான நிலமைகளையெல்லாம் கௌரவ சேர்.பொன்.இராமநாதன் அவர்களும் அன்றைய சைவப் பெரியார்களும் நன்கு கண்டும் அறிந்தும் ஆராய்ந்தும் உணர்ந்தும் இருந்தனர். இதன் காரணமாக தமிழ் இந்துப் பிள்ளைகள் தமிழ் சமய கலாசார சூழலில் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்தனர். சேர்.பொன் இராமநாதன் அவர்களின் இச்சிந்தனையில் கருவெய்தி பிறந்தவைதான் இரமநாதன் மகளிர் கல்லூரி, பரமேஸ்வராக்கல்லூரி, சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்பவையாகும்.

கௌரவ இராமநாதன் அவர்கள் 1903 ஆம் ஆண்டு மருதனார்மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அமைத்ததன் மூலம் அக்கால மிஷனரிமாரின் கிறிஸ்தவப் பாடசாலைகளில் எமது பெண்கள்

கல்வி கற்று மேலைநாட்டு கலாசார மோகத்தில் மூழ்கிப் போகாது தடுப்பதற்கு முயன்றார். இது மட்டுமல்லாது கல்வி கற்காமல் இருந்த பெரும் பகுதி பெண்ணினம், இந்து சமய தமிழ்ப் பண்பாட்டு சூழலில் கல்வி கற்கவும் வாய்ப்பளித்தார். மேலும் இராமநாதன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கமே அவரின் பின் இருபதாம் நூற்றாண்டின் முற்காலப்பகுதிகளில் திருவாளர் எஸ்.இராஜரட்ணம் அவர்கள் தலைமையில் (Hindu Board) இலங்கை முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட இந்து தமிழ்ப் பாடசாலைகளை நிறுவி கல்வித் தொண்டாற்றியமையும் ஈண்டு குறிப்பிடக் கூடிய தொன்றாகும்.

## இந்துக்கல்லூரி அதிகாரசபை

இக்கால கட்டங்களிலேயே வண்ணார் பண்ணையில் நாவலருக்குப் பின் நாவலரின் மாணாக்கரும் மருகருமாகிய திரு.N.S. பொன்னம்பலம் பிள்ளையும் மற்றும் அபிமானிகளும் உறவினரும் இணைந்து 1888இல் சைவசமய பரிபாலன சபையைத் தாபித்தனர். இச்சபையே இன்றுள்ள சைவ பரிபாலன சபையாகும். இச்சபை "இந்து சாதனம்" எனும் தமிழ் பத்திரிகையையும் "Hindu Organ" எனும் ஆங்கிலப் பத்திரிகையையும் வெளியிட்டு வந்ததோடு சைவ மக்கள் மத்தியில் சமய உண்மைகளையும், கருத்துக்களையும் பிரசாரம் செய்தலையும், உலகியற் கல்வியினையும், சமயக் கல்வியினையும், போதிக்கும் ஆற்றல் கொண்ட ஆங்கிலப் பாடசாலையை தாபிப்பதையும் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்நிலையிலேயே இன்றைய இந்துக்கல்லூரியும் தோற்றம் பெறத் தொடங்கி 1890 இல் சைவபரிபாலன சபையின் மேற்பார்வையிற் கொண்டு வரப்பட்டது.

1902 இல் சட்டவாக்க சபையில் கொண்டுவரப்பட்ட இந்துக்கல்லூரி அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் இந்துக் கல்லூரியின் நிர்வாகம் இயக்குநர் சபையின் கீழ் கொண்டுவரப்பட்டது.[3]

## இந்து மகளிர் கல்லூரி ஸ்தாபிதம்

இவ்வாறு இந்துக் கல்லூரி சைவசமயச் சூழலில் ஆங்கிலக் கல்வி போதிக்கும் ஒரு பாடசாலையாக எமது பிரதேசத்தில் உருவாகி இருந்த போதும் ஆண்கள் மட்டுமே பயிலக்கூடிய ஒரு பாடசாலையாகவே செயற்பட்டுவந்தது. இக்காலகட்டங்களில் யாழ் நகரில் இந்துப் பெண்களுக்கென ஒரு சாதாரணப் பாடசாலை தன்னும் இல்லாதது பெரும் குறையாகவே காணப்பட்டது. சேர. பொன் இராமநாதன் அவர்கள் இந்த விடயத்தில் முயற்சி எடுத்தபோதும் அவரால் சைவமக்கள் செறிந்து வாழ்ந்த வண்ணார்பண்ணைப் பகுதியில் பெண்களுக்கான ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையை அமைக்கமுடியாமற் போயிற்று. பொருத்தமான இடம் அவருக்கு கிடைக்காமையே இதற்கு காரணமாக இருந்தது. இதனால் யாழ் நகரிலிருந்து 5 மைல் தொலைவில் அமைந்துள்ள மருதனார் மடத்தில் தனது கல்லூரியை நிறுவ நேரிட்டது. போக்குவரத்து வசதி மிகக் குறைவான அக்காலத்தில் யாழ்நகரில் உள்ள பெண்கள் அங்கு சென்று கல்வி கற்பதென்பது ஒரு கடின காரியமாகவே இருந்து வந்தது. இதன் காரணமாகவும் அக்காலங்களில் இந்துத் தமிழ்ச் சமூகங்களிடையே காணப்பட்ட பெண்கள் மீதான இறுக்கமான கட்டுப்பாடுகள் காரணமாகவும் கிறிஸ்தவக் கல்லூரிகளில் கல்வி கற்ற மிகக் குறைந்த எண்ணிக்கையான பெண்களை தவிர ஏனைய பெண்கள் பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்ப்பற்றவர்களாகவே இருந்தனர்.

இந்நிலையில், இந்து தமிழ் சமூகம் முன்னேற வேண்டுமானால் அச்சமூகத்தைச் சேர்ந்த அச்சமூகத்தில் சரிபாதி இடத்தைப் பெறும் பெண்களும் கல்வி கற்க வேண்டும். அத்துடன் அவர்கள் இந்து தமிழ்க் கலாசார சூழலில் கல்வி கற்றால் மாத்திரமே எமது சமய கலாசாரப் பண்பாடுகள் வளர்க்கப்படவும் பேணப்படவும் முடியும் என்பதை நன்கு உணர்ந்ததுடன் மட்டுமல்லாமல் இதனை நோக்காகவும் கொண்டு

இந்துக்கல்லூரி அதிகார சபையினர் யாழ் நகரில் இந்துப் பெண்களுக்கென ஒரு தனிப்பாடசாலையை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் இந்துப் பெண்களுக்கென ஒரு பாடசாலையை அப்பொழுது இருந்த சூழ்நிலையில் அமைக்க முடியாதிருந்தது. எனினும் தங்களுடைய திட்டத்தை கைவிடாது ஆண்கள் பாடசாலையாக இருந்த தமது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலேயே பெண்களை அனுமதிக்க தீர்மானித்தனர். இத்தீர்மானம் 1935ஆம் ஆண்டில் நடை முறைப்படுத்தப்பட்டது.[4] இவ்வாய்ப்பினை இந்து சமூகம் முழுமையாகப் பயன்படுத்தியது என்று கூறுவதற்கில்லை.

கிட்டத்தட்ட 4 ஆண்டுகளின் பின்னர் கூட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படித்த மாணவிகளின் தொகை 45 ஆகத்தான் இருந்தது. ஆண்கள் பாடசாலையான யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் தங்கள் பெண்பிள்ளைகள் ஆண்களுடன் சேர்ந்து படிக்க பெற்றோர்கள் பின்னடிப்பதே மாணவிகளின் தொகை அதிகரிக்காமல் இருக்கின்றது என்பதை அப்பொழுது இந்துக்கல்லூரியின் அதிபராய் இருந்த திரு. A. குமாரசுவாமி அவர்களினாலும் இந்துக் கல்லூரி சபையினராலும் உணர முடிந்தது. பெண்களுக்கென ஒரு பாடசாலை அமைக்கப்பட்டாலே இந்துப் பெண்கள் சமூகத்தை கல்வியில் பிரவேசிக்கச் செய்யலாம் என்ற முடிவுக்கு அவர்கள் வரவேண்டி இருந்தது.

தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முதற்படியாக கஸ்தூரியார் வீதியில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்திடலுக்குக் கிழக்குப் பக்கமாக அமைந்த திருவாளர் எஸ். பொன்னுச்சாமி அவர்களின் "பொன்னாலயம்" எனும் தனியார் வீடொன்றில் இந்து மகளிர் கல்லூரி எனும் பெயரில் மகளிருக்கான பாடசாலையை ஆரம்பித்தனர்.[5] இப்பாடசாலை 10.09.1943 தொடக்கம் இயங்கத் தொடங்கியது.[6] 8ஆசிரியர்களையும் 110 மாணவிகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு முதலதிபராக திரு.A. குமாரசுவாமி அவர்களே கடமையாற்றினார். நாடு போற்றிய கல்விமானாகிய இவர், ஒரு தகுதி வாய்ந்த அதிபர் நம் கல்லூரிக்கென தனியாகக் கிடைக்கும் வரை எம் கல்லூரியின் வளர்ச்சிக்கு தன் பங்களிப்பினை இதய பூர்வமாக நல்கினார்.[7] 1944ஆம் ஆண்டில் இருந்து எம் கல்லூரிக்கென நிர்வாக சபையின் மேற்பார்வையில் சுயேட்சை அதிகாரம் கொண்ட பெண் அதிபர்கள் நியமிக்கப்பட்டனர். இவ் அதிபர்கள் வரிசையில் செல்வி காயத்திரி பொன்னுத்துரை(திருமதி. காயத்திரி கணேசன்) கல்லூரியின் முதல் அதிபராக நியமனம் பெற்றார்.[8] இக்காலத்தில் நான்காம் வகுப்பு தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையிலான வகுப்புக்களே நடைபெற்றன. சிறியளவில் ஒரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது. தனிப் பெண்கள் பாடசாலையாக இயங்கியமையால் நாளடைவில் மாணவர்கள் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது.

இடநெருக்கடி காரணமாக இப்பாடசாலை இந்துக்கல்லூரி மைதானத்துக்கு தற்காலிகக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு 27.02.1944 இல் இடமாற்றம் செய்யப்பட்டது. ஆனால் இவ் ஆண்டிலேயே எதிர்பாராத வகையில் தம் சொந்த அலுவல்களின் நிமித்தம் செல்வி காயத்திரி கணேசன் அவர்கள் தனது சேவையினின்றும் விலக நேரிட்டது. இதன் பொழுது எமது நாட்டிலேயே தகுதி வாய்ந்த ஒரு பெண் அதிபரைத் தேடி அலைந்த நிர்வாக சபையினர் இந்தியாவில் இருந்து பொருத்தமானவரைத் தருவித்து ஒப்பந்த அடிப்படையில் அதிபராக நியமிக்க முடிவு செய்தனர். இதன் காரணமாக இந்தியப் பெண்மணியான செல்வி முத்து அச்சையா அவர்கள் 1944ஆம் ஆண்டு இறுதியில் அதிபராக கல்லூரியைப் பொறுப்பேற்றார்.[9] வகுப்புக்கள் சிரேஷ்ட தராதரப்பத்திரம் வரை அதிகரித்தன. கல்லூரி மீண்டும் இட நெருக்கடியால் அவதிப்பட நேர்ந்தது.

இங்ஙனம் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இடங்களில் பாடசாலை இயங்கிக் கொண்டிருந்த காலத்திலேயே இந்துக்கல்லூரி அதிகார சபையினரும், திருவாளர். A. குமாரசாமி அவர்களும் நிரந்தரமான ஒரு காணியில் இந்து மகளிர் கல்லூரியை நிரந்தரமாக அமைக்க தீவிரமாகச் செயற்பட்டனர்.

### யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்னாள் பிரதி அதிபரின்

# வாழ்த்துரை

1943 ஆம் ஆண்டு செப்ரெம்பர் திங்கள் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை வேளை 10 மணி நேரம் புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஐவருடன் மூன்பதின்மராய் 110 மாணவிகளுடன் வண்ணையம்பதியில் கஸ்தூரியார் வீதியில் திருவாளர் பொன்னுச்சாமியின் மனையில் மணியோசை ஒலிக்க மின்குமிழ்கள் ஒளிகாலப் பல பெரியோர்கள் ஆசியுடன் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்பமாகியது.

யாழ். நகரிலே இந்துப் பெண்களுக்கொரு பாடசாலை வேண்டுமென்ற அவாவின் உந்துதலால் யாழ். இந்துக் கல்லூரி நிர்வாக சபையினரின் விடா முயற்சியினால் 1944 ஆம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி கால் கொண்டு 1945 ஆம் ஆண்டு திருமதி விசாலாட்சி சிவகுருநாதனால் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட விநாயகராலயத்தோடு கூடிய 40 பரப்பு நடுத்தோட்டக் காணியில் விடுதிச் சாலையுடன் உருப்பெற்றது.

பெற்றோர் மனங்களிக்க மாணவிகள் மகிழ்ந்தாட நடுத்தோட்டப் பிள்ளையார் அருள் பாலிக்க நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் கல்லூரி வளர்ச்சி பெற்றது. மாணவர் ஆசிரியர் தொகை பெருகப் பாடசாலையும் விசாலித்து வளர்ந்து வெகு விரைவில் கலை, விஞ்ஞானம், மனையியல், வர்த்தகம் என்னும் துறைகளில் சிறப்புறலாயிற்று. 1961 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் கல்லூரி பொறுப்பேற்கப்பட்டது. அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவிகள், நலன்விரும்பிகள் ஆகியோரின் பெருமுயற்சியினால் இளையதொரு கல்லூரி துரித வளர்ச்சியடைந்து அரசாங்கத்தினரின் கண்நோக்கை ஈர்த்தது. இதன் பிரகாரம் அதிஷ்டவசமாகப் பல வழிகளிலும் அரசாங்கத்தின் செல்வாக்கைப் பெற்று வெகு விரைவில் ஒரு முதலாந்தரக் கல்லூரியாகச் சிறந்து விளங்குகின்றது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியே! நின் வளர்ச்சி கண்டு பெருமிதமடைகின்றேன். நின் அழகியர் கலை கண்டு ஆனந்தமடைகின்றேன். கண் களிக்க நல்ல நாட்டியமும் செவிமடுக்க இனிய சங்கீதமும் கந்து பெரும் புகழ் பெறுகின்றாய். விளையாட்டுத் துறையின் வெற்றிகள் தான் என்னே! பழைய மாணவிகள் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்று ஆங்காங்கே சேவைகள் பல புரிந்து எம்மை மகிழ வைப்பதுதான் என்னே!

இன்னும் நின் முகப்பு வாயிலை அடைந்தால் கலை மகளின் சிறப்புறு சிலையொன்று, அணித்தாய் வாசிகசாலையோடமைந்த பெரியதொரு மண்டபம் அதைத் தாண்டி அடிவைத்தால் கூடைப்பந்தாட்ட விளையாட்டிடமும் அப்பாற் செல்லின் மனையியல் விஞ்ஞான கூடங்களும் விடுதிச்சாலையும் அருகருகே விநாயகராலயமும் விளையாட்டு மைதானமும் சிறப்புற அமைந்து காட்சியளிக்கின்றன.

நாற்பதாண்டுகள் நின்னிடத்தில் சேவையாற்றி பின் பத்து ஆண்டுகளும் அண்மையிலிருந்து நின் வளர்ச்சியினைக் கண்டும், புகழினைக் கேட்டும் களிப்படைந்தேன். நாட்டு நிலைமை சீரற்றதாயினும் இடர்கள் மாறி மாறித் தொடர்ந்திட்டபோதிலும் யாழ். இந்து மகளிர் கல்லூரி நின் புகழ் பரப்பி விளங்குவது போற்றுதற்குரியதாகும். ஐம்பதாண்டுகளில் கல்லூரியே! நின் வளர்ச்சி கண்டு ஆனந்திக்கிறேன். இத்தோடு அமையாது இன்னும் நீ சிறப்புற வளர்ந்து எம் சந்ததியினர் போற்றி மகிழ்வுற சைவ நெறியையும் தமிழர்தம் கலாசாரத்தையும் புகழ் மணம் பரப்பி ஒளிர என்றும் என் நல்வாசிகள்.

வையம் போற்றிட
வளம்பல சிறப்புற
வாழிய எம்கல்லூரி
வாழிய வாழியவே!

**திருமதி அ. நாகரத்தினம்**
கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபொழுது இருந்த
ஆசிரியர்களில் ஒருவர் - 1943

(பொன் விழா மலரின் பிரதி)

இவர்களுடைய முயற்சி கைகூடுவதற்கும் சைவத்தமிழ் பெண்களின் கல்விக்கும் நல்வாழ்விற்கும் ஒருவரப்பிரசாதமெனக் கருதக்கூடிய கைங்கரியம் ஒன்றை சைவப்பெரியார் சிவகுருநாதர் விசாலாட்சி குடும்பத்தினர் செய்தனர்.

## எங்கள் கல்லூரி ஸ்தாபகர்

நீராவியடியில் வாழ்ந்த உயர்குடித் தோன்றலாகிய சட்டத்தரணி இராமலிங்கம் சிவகுருநாதர் (நகர மாவட்ட சபைத் தலைவர்) அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் விசாலாட்சியம்மா என்னும் அம்மையார் இராமநாதன் கல்லூரிக்கு நிகராக யாழ் நகரில் இந்து சமய கலாசார பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட மகளிர் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டும் என்று அன்புள்ளம் கொண்டு தயாள சிந்தையுடன் அரசடிவீதியில் தமக்கே உரித்தாக இருந்த 24 நிலப்பரப்புக் காணியை கல்லூரிக்கென அன்பளிப்புச் செய்தார். அவர்களே எமது கல்லூரி ஸ்தாபகர் என்னும் பெருமையையும் பெற்றார். அவரது கணவர் சிவகுருநாதர் அவர்களும் அவரது நெருங்கிய உறவினர் திருமதி வள்ளியம்மா சிவகுரு அவர்களும் தமது 16 நிலப்பரப்புக் காணியை நன்கொடையாகத் தந்து உதவினார்கள்.[10] அத்துடன் காப்புக் கடவுளாகிய விநாயகருக்குக் கட்டப்பட்ட இராஜவரோதய விநாயகர் ஆலயத்தையும் கொண்டதாக இக்காணி அமைந்தமை கல்லூரிக்கு கிடைத்த ஆசி என்றே கொள்ளலாம்.

இவ்வளவு பெரிய ஈகையின் மூலம் அம்மையார் அவர்கள் ஆயிரம் ஆயிரம் மாணவிகளின் அன்னையாகத் திகழ்வார் என்பது கூற வேண்டியதில்லை. மேலும் இவர் கல்லூரி கட்டுவதற்குத் தேவையான காணியை வழங்கியது மட்டுமல்லாமல் வீடுகள் தோறும் சென்றும் கட்டடத்திற்கான நிதியும் திரட்டிக் கொடுத்தார்.[11] இங்ஙனம் அவர்கள் வழங்கிய காணி ஒரு சாதாரண தரிசு நிலம் அல்ல. மாநகர சபை எல்லைக்குள் குடிசனம் அடர்த்தியான இடத்தில் பலவித போக்குவரத்து வசதிகள் கொண்ட நல்ல மண்வளம் உள்ள பயன்மிக்க காணியாகும். அத்துடன் நகர்புறச் சூழலும் கிராமப்புறச்சூழலும் இணைந்த ஒரு சூழலாகும். இது போன்ற ஒரு சூழல் அரசியல் செல்வாக்கு, பொருளாதார வளம் என்பவை நிரம்பப்பெற்ற கௌரவ சேர்.பொன் இராமநாதன் அவர்களுக்குக் கூட கிடைக்காமற் போயிற்று. இதன் காரணமாகவே அவர் மருதனார் மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்த வகையில் இந்துக் கல்லூரி அதிகார சபையினருக்கு திருமதி சிவகுருநாதர் விசாலாட்சியம்மா குடும்பத்தினர் கைகொடுத்து உதவியமை எமது கல்லூரியின் உருவாக்கத்திற்கு வழிகோலிற்று.

## இந்துக்கல்லூரி அதிகார சபையினரின் பணி

அதிகார சபையினரும் அம்மையாரின் உயரிய எண்ணம் வடிவம் பெறச் செயற்படத் தொடங்கினர். இக்கால கட்டத்தில் இந்துக்கல்லூரி அதிகார சபையினரின் முகாமையாளராக திருவாளர் R.R. நல்லையா J.P,O.B.E, Proctor (1944-1951) அவர்கள் கடமையாற்றினார்கள்.[12] கிடைத்த காணியில் உடனடியாக பெரும் கட்டடங்களைத் திட்டமிட்டுக் கட்டுவதற்கு அவர்கள் முனையவில்லை. அத்தகைய ஒரு திட்டத்திற்கு நிதிப்பற்றாக்குறையே முக்கிய காரணமாக இருந்திருக்கலாம்.

முதன் முதலாக அமைக்கப்பட்ட கட்டடமே அரைச் சுவரைக் கொண்ட வகுப்பறையாகவும் ஓலைகளால் வேயப்பட்டதாகவும் அமைந்தமை இதை எடுத்துக்காட்டுகின்றது. இதைத் தவிர அத்தகைய ஒரு பெரும் திட்டத்தை நிறைவேற்றக் காலதாமதமும் ஆகலாம் என்ற ஒரு எண்ணமும் அவர்களிடம் இருந்திருக்கலாம். ஆரம்பித்து விட்டால் அது தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கையும் கொண்டு செயற்பட்டிருக்கலாம். எனவே கிடைத்த காணியில் சமயோசிதமாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கட்டடம்

ஒன்றை அமைத்து பாடசாலையை உடனடியாக ஆரம்பித்தமை அவர்களுடைய இலட்சியத்தில் அவர்கள் கொண்டு இருந்த உறுதிப்பாட்டையும் திட சங்கற்பத்தையும் காட்டுகின்றது. இப்பாடசாலை வளரும், தமிழ், சைவசமூகம் அதனை வரவேற்கும், அதன் அவசியத்தை உணரும் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்ததையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

ஏனெனில் அக்காலங்களில் மாணவர்கள் பற்றாக்குறையினால் அல்லது பணமுடக்குகளினால் சில பாடசாலைகள் இடைநிறுத்தப்பட்டமைக்கு அல்லது இடை நிறுத்த யோசித்தமைக்கு சான்றுகள் உள்ளன. யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் ஒரு காலத்தில் மூடப்பட்டு கல்வித் திணைக்கள அலுவலகமாக மாற்ற முயற்சி எடுக்கப்பட்டமை இதற்கு ஒரு உதாரணமாகும்.[13]

இது போன்ற நிலைமைகள் இக்கல்லூரிக்கு ஏற்படா வண்ணம் கல்லூரியின் தாபிதத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் தங்கள் தன்னலம் கருதாத நற்சேவையை நல்கிய இந்துக்கல்லூரி அதிகாரசபையினருள் கல்லூரியோடு நீண்டநாள் தொடர்புடையவர்களாக இருந்த சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி (சபாநாயகர், சட்டசபை)திரு R.R நல்லையா அவர்கள், முடிக்குரிய நியாய துரந்தரர் திரு.T.முத்துசுவாமிப்பிள்ளை அவர்கள், வழக்கறிஞர் திரு.S. சிவகுருநாதன் அவர்கள் இராசவாசல் முதலியார் திரு.N. பொன்னம்பலம் அவர்கள், திரு.A.அருளம்பலம் J.P ( வழக்கறிஞர்)அவர்கள், திரு.சி.அருளம்பலம் வழக்கறிஞர் (பின் நாடாளுமன்ற உறுப்பினர்) திரு.ஏ.தனபாலசிங்கம் வழக்கறிஞர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.[14]

## நிரந்தரமான இடத்தில் கல்லூரி

கல்லூரியானது நிரந்தரமான புதிய இடத்திற்கு 1945ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆந் திகதி யாழ் இந்து கல்லூரி அதிகார சபையின் முகாமையாளராக இருந்த (1934-1944) சேர் வைத்திலிங்கம் துரைசாமி (Speaker, Ceylon State Council) அவர்களால் கல்லூரியின் விஞ்ஞான கூடத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்துடன் இடமாற்றம் செய்யப்பட்டது.[15] அதுவரை காலமும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் உள்ள தற்காலிக பந்தல்களில் இயங்கி வந்த யாழ். இந்து மகளிர் கல்லூரி நிரந்தரமான தனது சொந்த வீட்டில் இயங்கத் தொடங்கிற்று. செல்வி முத்து அச்சையா அவர்கள் தொடர்ந்தும் அதிபராகக் கடமையாற்றினார்.

முதன் முதல் அமைக்கப்பட்ட கட்டடத்திலேயே ஒரு அறை அதிபரின் அலுவலகமாகவும் இன்னோர் அறை ஆசிரியர்களின் அறையாகவும் ஏனையவை வகுப்பறைகளாகவும் அமைந்தன.

பெண் அதிபரும் பெண் ஆசிரியைகளும் கடமையாற்றும் ஒரு பெண்கள் பாடசாலையில் தங்கள் பிள்ளைகளை பெற்றோர் கூச்சமின்றி சேர்க்க முன் வந்தனர். படிப்படியாக ஆனால் விரைவாக மாணவிகள் எண்ணிக்கை அதிகரித்தது.

## விடுதிச் சாலை

இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணப் பட்டினப் பகுதியில் அமைந்திருந்தாலும் அது யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதியிலும் உள்ள இந்து மதப் பெண்களுக்கும் கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே அதன் ஸ்தாபர்களின் நோக்கமாகும். பாடசாலையைச் சுற்றியுள்ள இரண்டு, மூன்று கிலோ மீற்றரில் உள்ள இந்துக்குடும்பப் பிள்ளைகள் கற்பதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் மக்களிடையே தமிழ், இந்துக் கலாசாரத்தை புகுத்தவோ, வளர்க்கவோ முடியாதென்பது அவர்களின் கருத்தாகும். எனவே தொலைவில் வாழும் இந்துக்குடும்பப் பெண்பிள்ளைகளும் இக்கல்லூரியில் கற்பதற்கு வாய்ப்பளிப்பதை விடுதிச் சாலை ஒன்றின் மூலமே உறுதிப்படுத்த முடியும் என்பதை உணர்ந்த அதிபரும் இந்துக்கல்லூரி அதிகார சபையினரும் 1945ஆம் ஆண்டு விடுதிச் சாலை ஒன்றை அமைத்தனர்.[16]

விடுதிச்சாலை என்பது லேசான காரியமல்ல. மாணவர் தங்குமிடம் அன்றாட வசதிகள் உணவு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். சமையலறை, சாப்பாட்டறை, மாணவிகள் தங்குமறை, நீர்வசதி, மின்சார வசதி, மலசலகூட வசதிகள் அத்தனையும் அவசியமாகும். விடுதிச்சாலையின் ஆரம்ப கட்டத்தில் இவை எல்லாம் முற்றாக நிறைவேற்றப்படாவிட்டாலும், தற்காலிகமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு விடுதிச் சாலை ஆரம்பிக்கப்பட்டது, ஒரு வரவேற்கத்தக்க விடயம் மாத்திரமன்றி கல்லூரியின் வளர்ச்சியில் ஒரு கல்தூரம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது என்றும் கூறலாம்.

## கல்லூரி வளர்ச்சிப் பாதையில் அதிபர்களின் பணி

செல்வி முத்து அச்சையாவின் (1944-1945) பின் அவரின் பணியை நிறைவேற்ற அவரைத் தொடர்ந்து பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர்கள் முனைப்புடன் சளைக்காது உழைத்தனர். இவ்வரிசையில் ஸ்ரீமதி ஜெம்மாராணி சிற்றம்பலம் (1945-1946) திருமதி கிளாரா மொற்வாணி (1946-1948) ஆகியோரின் பணிகள் இன்றும் நினைவு கூரக் கூடிய வகையில் அமைந்துள்ளன.

குறிப்பாக அன்றைய இலங்கையில், படித்த அறிவாளிகளில் ஒருவரான திருமதி. கிளாரா மொற்வானி அஞ்சாமை, அறிவு, ஊக்கம் நிறைந்தவர். இவர் காலத்தில் 14.06.1947 தொடக்கம் கல்லூரி விடுதிச்சாலை ஒழுங்காக இயங்கத் தொடங்கி திறம்பட நிர்வகிப்பட்டதால் விடுதி மாணவர் தொகை நூற்றுக்கும் மேற்பட்டது.[17]

கல்லூரியில் கிட்டத்தட்ட 354 மாணவர்கள் கல்வி கற்றனர் என அறிய முடிகின்றது. 01.06.1947இல் இவரின் முயற்சியினால் பழைய மாணவர் சங்கமும் உருவாக்கப்பட்டது.[18]

" நல்லதொரு அதிபரைத் தாருங்கள், நான் நல்லதொரு பாடசாலையைத் தருகிறேன்" என்றார் ஒரு மேதை. இதற்கு இலக்கணமாக அமைந்தவர் திருமதி கிளாரா மொற்வானி. அவர்கள் மாற்றம் பெற்று சென்ற பின் 1948 ஆம் ஆண்டு பாடசாலையைப் பொறுப்பேற்ற புதிய அதிபர் திருமதி சரோஜினிராவ் அவர்கள் ஆவார்.[19] இவரின் ஆறு ஆண்டு பதவிக்காலத்திலேயே (1948-1954) இப்பாடசாலை ஒரு முழு வளர்ச்சியடைந்த பாடசாலையாக இன்று திகழ்வதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

அவர் சேவைக் காலத்தில் கல்லூரி வளர்ச்சிக்காக அவர் நிறைவேற்றிய திட்டங்களையும் செயற்பாடுகளையும் இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது.[20]

1. கல்லூரி மாணவிகளிடையே இந்துமத நம்பிக்கை, இந்து மத கலாசாரம் விருத்தியடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
2. அவர்கள் சமூக இசைவாக்கம், ஆளுமை போன்ற திறன்களைப் பெற்று வாழ்வதற்கு தேவையான புறப்பாட விதானங்கள் ஏற்படுத்தப்பட்டன
3. பாடசாலை கொடிக்காக பச்சை - வெள்ளை நிறங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
4. உயர்தரக் கலை, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு விஞ்ஞான கூடமும் அமைக்கபட்டது
5. தொழில்நுட்பப் பாடங்களான கைவேலை, நெசவு, தையல் போன்ற பாடங்களும் சங்கீதம், நடனம், சித்திரம் போன்ற கவின் கலைப் பாடங்களும் அறிமுகம் செய்யப்பட்டன.
6. உடற்பயிற்சிக்கும், விளையாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததோடு நில்லாமல் விளையாட்டு மைதானம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இல்லங்கள் உருவாக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.

7. பாடசாலைக்கான இலச்சினை, மகுடவாசகம், கல்லூரிக்கீதம் என்பன உருவாக்கப்பட்டன.

8. "சக்தி" என்ற பெயரில் பாடசாலை சஞ்சிகை ஒன்றும் வருடா வருடம் வெளிவருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

9. களியாட்ட விழா ஒன்றும், அதிஷ்டலாபச் சீட்டிழுப்பும் நடாத்தப்பட்டு பாடசாலை சுற்று மதில் கட்டப்பட்டது.[21]

பாடசாலையின் இத்தகைய முனைப்பான முன்னேற்றம் மக்களிடையே அது பற்றிய உயர்வான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியது. இதனால் பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை படிப்படியாகக் கூடியது. 1954ஆம் ஆண்டு 42 ஆசிரியர்களையும் 1100 மாணவர்களையும் கொண்டதாக விளங்கியமை இதன் வளர்ச்சியை எடுத்துக் காட்டுக்கின்றது.[22] இதனால் பாடசாலை இரண்டாம் தரப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.[23] மேலும் பாடசாலையில் அத்தியாவசியமான அம்சங்களில் நூலகமும் ஒன்றாகும்.

எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பொருத்தமான நூல்கள் பலவற்றைத் திரட்டி பாடசாலை நூலகம் ஒன்றை அமைப்பதற்கும் திருமதி சறோஜினி ராவ் முயற்சி செய்தார். ஆனால் போதிய கட்டட வசதி இன்மை காரணமாக இந்நூல்கள் சில அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டன.

இவ்வழிகோலுகையானது 1954இல் இவரின் பின் அதிபராகப் பொறுப்பேற்ற திருமதி விமலா ஆறுமுகம் அவர்களால் பூர்த்தி செய்யப்பட்டது. திருமதி வி.ஆறுமுகம் அவர்கள் பாடசாலைக்குப் புதியவரல்ல. இப்பாடசாலையிலேயே 15 வருடங்களுக்கு மேலாகக் கற்பித்த ஓர் ஆசிரியை ஆவார். பாடசாலையுடன் பரீச்சயமான ஒருவர் அப்பாடசாலையின் அதிபராகக் கடமை புரிவது எப்போதும் ஒரு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பது ஒரு பொதுவான அனுபவமாகும். தனது அனுபவங்களைப் பயன்படுத்தி மாணவர்களை வழிப்படுத்தவும் ஆசிரியர்களை நெறிப்படுத்தவும் அவரால் முடிந்தது. திருமதி வி.ஆறுமுகம் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று ஒரு வருட காலத்திலேயே 1.1.1956 இல் கல்லூரி முதலாம் தரப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.[24]

இவ்வதிபரின் சேவைக்கு முகாமையாளர் திருவாளர் T. முத்துசுவாமிப்பிள்ளையவர்களும் அவர் குழுவினரும் மிக மிக உறுதுணையாக இருந்தனர். தமது ஒரே ஒரு பெண்கள் கல்லூரியும், கடைசிக் கல்லூரியுமான இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சியில் இந்துக்கல்லூரி அதிகார சபையினர் மிகக் கூடிய அக்கறை செலுத்தினர்.

அதிபர் தனது 1960ஆம் ஆண்டு அறிக்கையில் 'இந்துக்கல்லூரிச் சபை எப்பொழுதும் எந்த உதவியும் செய்யத் தயாராகவுள்ளது. சென்ற தவணையும் இந்துக்கல்லூரிச் சபை கல்லூரி முன்புறத்தில் நிர்வாகக் கட்டடம் ஒன்று அமைக்கத் திட்டம் தீட்டியது. ஆனால் அரசின் பாடசாலை சுவீகரிப்புத் திட்டம் இத்திட்டத்தை கைவிடச் செய்து விட்டது "[25] எனக் கூறி உள்ளமை இந்துக் கல்லூரிச் சபையின் ஆர்வத்திற்கும் சேவைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

திருமதி வி.ஆறுமுகம் அவர்களின் காலத்திலேயே 01.12.1960 இல் அரசாங்கத்தின் பாடசாலைச் சுவீகரிப்பு திட்டத்தின் கீழ் இதுவரை இந்துக் கல்லூரி அதிகார சபையினரால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகளின் நிர்வாகம், இந்து மகளிர் கல்லூரியின் நிர்வாகம் உட்பட இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டு வரப்பட்டது.

இச்சுவீகரிப்புத் திட்டத்தில் கருத்து வேறுபாடுகள் பல இருந்தாலும் இந்துக்கல்லூரி அதிகார சபையினர் தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து பாடசாலைகளையும் நிபந்தனைகளுடன் அரசிடம் கையளிப்பதென தீர்மானித்தனர். இந்நிபந்தனை பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. ' It was ensured that though they were to be government schools they were to be run on the lines originally intended by the Board"[26] 01.12.1960இருந்து யாழ் இந்து மகளிர் கல்லூரியும் அரச பாடசாலையாகியது.[27] ஆனாலும் அரசின்

சுவீகரிப்புக் கொள்கை காரணமாக கூட பாடசாலைக் கட்டடம் அமைக்கும் முயற்சிகள் கைவிடப்படவில்லை.

1963 இல் மாணவிகளால் நடாத்தப்பட்ட நாடக விழாவில் திரட்டப்பட்ட (நளதமயந்தி, கற்புக்கனல்) பணத்தைக் கொண்டும், அப்பொழுது நல்லூர்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் சி. அருளம்பலம் அவர்கள் அரசாங்கத்தின் ஊடாகப் பெற்றுத் தந்த நிதியுதவியுடனும் அழகிய ஒரு பிரார்த்தனை மண்டபமும் கல்லூரி நூலகமும் அமைக்கப்பட்டன.[28] இப்பிரார்த்தனை மண்டபமே கல்லூரி கட்டுவதற்கு தேவையான காணியை வழங்கிய திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அவர்களின் பெயரைத் தாங்கிய "விசாலாட்சி சிவகுருநாதர் மண்டபம்" எனும் பெயரில் இன்றும் பிரதான மண்டபமாகத் திகழ்கின்றது.

மேலும் இந்து மகளிர் கல்லூரி ஸ்தாபிதம் பெற்ற காலம் தொடக்கம் நான்காம் வகுப்பே இக்கல்லூரியின் ஆரம்ப வகுப்பாக இருந்தது. கல்லூரியின் பெற்றோர், ஆசிரியர், நலன்விரும்பிகளின் வேண்டுகோளுக்கு இணங்க 1968ஆம் ஆண்டு முதல் முதலாம் வகுப்பு ஆரம்ப வகுப்பாக்கப்பட்டது. இந்நிகழ்வானது கல்லூரி மாணவியர் தொகை அதிகரிக்க ஒரு காரணமாக அமைந்தது.

இங்ஙனம் கல்லூரியை நல்ல முறையில் முன்னெடுத்துச் சென்ற திருமதி வி.ஆறுமுகம் அவர்கள் 1975இல் ஓய்வு பெற்றார். பொதுவாக திறமை மிக்க அதிபரொருவர் ஓய்வு பெறும் பொழுது பாடசாலையின் எதிர்காலம் பற்றி பெற்றோரும் ஏனையோரும் சிந்திப்பது வழக்கம். மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தளராமல் அதே நேரத்தில் பாடசாலையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய தகைமைகள் நிரம்பிய செல்வி ப. இராமநாதன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு வைகாசி மாதம் பாடசாலையைப் பொறுப்பேற்றார்.[29] இக்கல்லூரியிலேயே நீண்ட காலமாக ஆசிரியையாகவும் உபஅதிபராகவும் இருந்த காரணத்தினால் மாணவர், பெற்றோர், பாடசாலை நிர்வாகம் பற்றிய அறிவும், அனுபவம் பெற்றிருந்த செல்வி ப. இராமநாதன் காலத்தில் பாடசாலை அடைந்த துரித வளர்ச்சி வெளிப்படையாகத் தோற்றமளித்தது.

பாடசாலையின் தரம் மாணவர்களின் தகைமையிலும் ஆசிரியரின் அர்ப்பணிப்பிலுமே தங்கியுள்ளது என்ற யதார்த்தமான கருத்தைக் கொண்டிருந்த அதிபர் அவர்கள் இவற்றை உறுதிப்படுத்துவதில் சளைக்காது தொழிற்பட்டார். மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலே அப்பாடசாலையை கல்வித்துறையிலும் ஏனைய துறையிலும் முன்னெடுத்துச் செல்லலாம் என்ற உண்மையை அறிந்திருந்தமையினால் ஆரம்பப் பிரிவில் இருந்து மாணவர்கள் நேரடியாக கல்லூரியின் கனிஷ்ட, இடைநிலைப் வகுப்புக்களில் அனுமதி பெறுவதை கட்டுப்படுத்தும் முகமாக அனுமதிப் பரீட்சைகள் மூலம் மாணவர்களுக்கு அனுமதி வழங்கும் முறையை கையாண்டார். இதன் காரணமாக 1978ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்ப வகுப்புக்கள் தனியாக்கப்பட்டு இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் தனியாக இயங்கத் தொடங்கிற்று.[30] இதற்கு வேறானதொரு அதிபரும் நியமிக்கப்பட்டார்.

அத்துடன் தகைமையும், கற்பித்தற் திறனும், ஆசிரியைக்குரிய நற்பண்புகளும் நிரம்பிய ஆசிரியர்களையே தேர்ந்தெடுத்து தன் ஆசிரியர் குழாமில் சேர்த்துக் கொண்டார். ஆசிரியர், மாணவர் என்ற இருபாலருமே துரிதமாக பயனுள்ள முறையில் தொழிற்படக்கூடிய கல்லூரி நிர்வாகத்தை மேற்கொண்டார். ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் அதிகூடிய உழைப்பைப் பெறவும் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஆற்றல்களை வெளிக் கொண்டு வரவும் அவர் கையாண்ட முறைகள் அவரின் நிர்வாக ஞானத்தைக் காட்டுகின்றது.

இக்கால கட்டங்களில் இக்கல்லூரியில் இருந்து பெருமளவு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெவ்வேறு துறைகளிலும் இருந்து அனுமதி பெற்றனர். விளையாட்டுத்துறையிலும் ஏனைய பெரிய பாடசாலைகளுக்கு சளைத்ததாக இல்லை என்று கருதக்கூடிய அளவிற்கு கல்லூரி முன்னேற்றத்தை காட்டியது.

வெளிப்படையாகத் தோற்றமளித்த இச்சாதனைகள் பாடசாலை பற்றிய ஒரு உயர்வான அபிப்பிராயத்தை ஏற்படுத்தின. தொலைவான இடங்களில் வசிக்கும் பெற்றோர்கள், வேறு பாடசாலைகளில் படித்த மாணவர்கள் இப்பாடசாலையில் எப்படியேனும் அனுமதி பெற வேண்டும் என்று முண்டியடித்தமை இதற்கு சான்று பகருகின்றது. இதன் விளைவாக 1978 இல் மாணவர் தொகை 1790 ஆக அதிகரித்தது.

மேலும் இக்கால கட்டங்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அதிபர் அலுவலகமும் ஒரு விஞ்ஞான கூடமும் அமைக்கப்பட்டன. மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்த வகுப்பறை மண்டபம் 10 வகுப்பறைகள் கொண்ட மாடிக்கட்டடமாக மாறியது. புதிதாக இரசாயன, பௌதீக, உயிரியல் ஆய்வு கூடங்கள் புதிய வசதிகளுடன் அமைக்கப்பட்டன. பாடசாலை விடுதியைச் சுற்றி பாதுகாப்பான தனிமதில் கட்டப்பட்டது. இவை நன்கு திட்டமிடப்பட்டு கல்லூரியின் நலனில் அக்கறையுடைய பாராளுமன்ற அங்கத்தவரின் நிதி ஒதுக்கீட்டினாலும் கல்வித்திணைக்கள நிதி ஒதுக்கீடுகளினாலும் செம்மையாகக் கட்டப்பட்டன. கல்லூரியின் பிள்ளையார் கோயிலும் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகமும் இவர் காலத்தில் நடந்தது.[31]

கட்டடங்கள் கட்டுவதில் மட்டும் தன் நாட்டத்தைச் செலுத்தாது மாணவர்களின் கல்வி உயர்ச்சியிலும் ஒழுக்கத்திலும் விஷேச கவனம் செலுத்தியமையினால் அவர் காலத்தில் கற்ற ஒவ்வொரு மாணவியின் நினைவிலும் நீங்கா இடம் பெற்றார்.

மணிமுடி சூடிய சில மாமன்னர்களின் ஆட்சிக்காலம் எவ்வாறு ஒரு நாட்டின் சரித்திரத்திற் பொற்காலமாக அமைகின்றதோ அவ்வாறே இம் முடிசூடாச் செல்வியின் அதிபர் பதிவிக்காலம் இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றிலே ஒரு பொற்காலமாகும்.[32]

செல்வி ப.இராமநாதன் அவர்கள் 1986 ஆம் ஆண்டு யூன் மாதம் ஓய்வு பெற்றதின் பின் திருமதி.தி.நாகராஜா அவர்கள் அதிபராக கடமையாற்றினார். இவர் ஏற்கனவே பாடசாலையில் நடைமுறையில் இருந்த முனைப்பான எல்லாத் தொழிற்பாடுகளையும் சிறிதும் தளரவிடாது முன்னெடுத்துச் சென்றார். கல்லூரியின் முன்னேற்றத்தின் 50வது ஆண்டான 1993ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. இவரின் பின் அதிபர்களாக திருமதி சரஸ்வதி ஜெயராசா (1993-2006) திருமதி வேதநாயகி பேரின்பநாதன் (2006-2012) ஆகியோர் கடமையாற்றினார்கள். தற்பொழுது கல்லூரியின் பவள விழா ஆண்டில் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்கள் அதிபராக கடமையாற்றி வருகின்றார். 8 ஆசிரியர்களுடனும் 110 மாணவர்களுடனும் இரவல் இடங்களில் 1943 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ் இந்து மகளிர் கல்லூரி தனது 75வது அகவையில் 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் 2200 மாணவர்களையும் 100 பரப்புக் காணியில் வியாபித்த கட்டடங்களையும் தன தாக்கியதோடு மட்டுமல்லாமல் தான் உருவாக்கிய புதல்விகளால் மனமுவர்ந்து உருவாக்கி சமர்ப்பிக்கப்பட்ட “பவளவிழா மண்டபத்தையும்” பெருமையுடன் ஏற்று, யாழ் நகரில் உள்ள சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

மேலும் பெண் கல்வி வளர்சசிக்கென உயர்நோக்கோடு நிறுவப்பட்ட இக்கல்வி ஸ்தாபனம் காலத்தின் தேவைக்கேற்றவாறு தன் பணியை செவ்வனே செய்து வந்தாலும் காலத்திற்கு காலம் அதன் பணிகளையும் சாதனைகளையும் நினைவு கூருவதும், அவசியம் ஏற்பட்டால் மதிப்பீடு செய்வதும் ஒப்பீட்டு நோக்கில் ஆராய்வதும் அதன் முன்னேற்றத்திற்கு அவசியமானதாகும்.

**செல்வி நிர்மலா சோமசுந்தரம்**
பழைய மாணவி, ஆசிரியர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி

## அடிக்குறிப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1. | கா. மாணிக்கவாசகர், | "யாழ் நகரின் கல்விக் கருவூலம் வேம்படி"<br>வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, நூற்றம்பதாவது ஆண்டுமலர் 1988, ப.37 |
| 2. | M.Vythilingam | The Life of Sir Ponnampalam Ramanathan<br>Volume 11, Thirumagal Press, Chunnakam<br>1977, P.549. |
| 3. | பேராசிரியர்.ச.சத்தியசீலன்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | Jaffna Hindu College(1890-1990)<br>யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வரலாறு<br>நூற்றாண்டு மலர் |
| 4. | V . Sivasupramanium | "A FLASH BACK"<br>Jaffna Hindu College (1890 - 1990)<br>நூற்றாண்டு மலர் P.122 |
| 5. | திருமதி ஞானேஸ்வரி<br>சொக்கலிங்கம் | "யாழ் இந்து மகளிர் கல்லூரி பற்றி ஒரு வரலாற்று நோக்கு"<br>யாழ் இந்து மகளிர் பொன்விழா மலர்<br>1993. ப. 24 |
| 6. | மேற்படி | ப.24 |
| 7. | திருமதி. திலகவதி<br>யோகநாதன் | "பொன்விழாக்காணும் கல்லூரிக்கு மெருகூட்டிய முன்னாள் முதல்வர்கள்"<br>யாழ் இந்து மகளிர் பொன்விழா மலர்<br>1993 ப.29 |
| 8. | திருமதி ஞானேஸ்வரி<br>சொக்கலிங்கம் | முற்சுட்டியது ப.24 |
| 9. | திருமதி. திலகவதி<br>யோகநாதன் | முற்சுட்டியது ப-30 |
| 10. | திருமதி ஞானேஸ்வரி<br>சொக்கலிங்கம் | முற்சுட்டியது ப-24 |
| 11. | அதிபரின் அறிக்கை | சக்தி 1960-1961, ப.24 |
| 12. | Dr. V.Yoganathan | Board of Directors of Jaffna Hindu College and Affiliated Schools.<br>Centenary Souvenir Jaffna Hindu College 1890-1990, P. 77 |
| 13. | திருமதி. சி. பொன்னம்பலம் | "கடந்தகால நினைவுகள்" யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்<br>வைரவ விழா மலர் 1968-1969, ப. 16 |
| 14. | திருமதி. ஞானேஸ்வரி<br>சொக்கலிங்கம் | முற்சுட்டியது ப.25 |
| 15. | மேற்படி | ப.24 |
| 16. | மேற்படி | ப.24 |
| 17. | மேற்படி | ப.25 |
| 18. | திருமதி ம. அருணாசலம் | "பழைய மாணவர் சங்க அறிக்கை" யாழ் இந்து மகளிர் கல்லூரி<br>வெள்ளி விழா மலர், 1968, ப. 46 |
| 19. | திருமதி திலகவதி<br>யோகநாதன் | முற்சுட்டியது ப.31 |

20. Miss Jeyadevi Rajah — "The Jaffna Hindu Ladies' College, Sakthi, 1954, P.20

21. Miss K.Manicavasager — "The Jaffna Hindu Ladies' College, Carnival - As the Editor Sees it"
"The Jaffna Hindu Ladies' College Carnival Souvenir, 1954, P.7

22. மேற்படி — ப.7

23. மேற்படி — ப.7

24. அதிபரின் அறிக்கை — சக்தி, 1960-1961, ப.7

25. மேற்படி — ப.7

26. Dr. V.Yoganathan — முற்சுட்டியது ப.78

27. மேற்படி — ப.78

28. திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் — முற்சுட்டியது ப.26

29. திருமதி திலகவதி யோகநாதன் — முற்சுட்டியது ப.31

30. திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் — முற்சுட்டியது ப.27

31. திருமதி திலகவதி யோகநாதன் — முற்சுட்டியது ப.32

32. மேற்படி — ப.32

# 1954


IN THE SCIENCE LAB


WINNERS MUSIC COMPETITION



BOARD OF PREFECTS


IN THE HOME SCIENCE LAB


BUSINESS IN COLLEGE CO-OPERATIVE STORES


JAFFNA'S FUTURE ARTISTES


NET BALL WINNERS


THROW BALL WINNERS

# அறிவாலயத்தை அலங்கரித்த அதிபர்கள் (1943- 1993)

## காப்பு

ஆண்டு நாற்பது
மூன்று செப்டம்பர்
தேதியாம் பத்து
தேர்ந்த நன்நாளில்

தோன்றி வளர்ந்து
சுந்தரம் பெற்று
ஈண்டு புகழுடன்
இன்னல்கள் இடையிலும்

தன் கடன் பணி
தவ றிடா மலே
இன் முகத்துடன்
இனிது செய்திடும்

அன்னையே உனை
அடி பணிகிறோம்

கல்லூரி முதல் அதிபர்
கனம் திரு.ஏ.குமாரசாமி

சகோ தரக் கல்லூரியோடு
தானுமே இதனை ஏற்று
கருத்துடன் பணிகள் தன்னை
சிறப்புடன் ஆற்றி நின்றார்

அடுத்துமே வந்து சேர்ந்தார்
அதிபர் காயத்திரி கணேசன்
சமய அறிவும்
தகைமையும் பெற்றவர்

கடுகு சிறிது
காரம் பெரிது
உருவம் சிறிது
உரமோ பெரிது

குடு குடுவென்று
குருவி போல் பறந்து
திறனுடன் கடமை
சிறப்புறச் செய்தவர்

ஒழுக்கம் உயிரினும்
உயர்ந்தது என்ற
உண்மையை மாணவர்
உளமதிற் பதித்தவர்

சுறு சுறுப்பாய் இவர்
சுழன்றிடும் போது
சொந்த விடயம்
துரித விலகல்

வந்தவர் அதன் பின்
முத்து அச்சயா





நெடிது உயர்ந்த
கொடி போன்ற இவரோ
மிடுக்கும் வைரமும்
மிகவும் உடையவர்

வகுப்புகள் உயர்த்தி
வசதிகள் கூட்டி
திறமையாய்ப் பணிகள்
செய்திடும் போது
ஒப்பந்தம் முடிந்திட
ஊருக்குச் சென்று விட்டார்



நான்காம் அதிபர்
நம் இனத்தவ ராம்
ஜெம்ம ராணி
சிற்றம் பலம் (ஆவார்) அவர்

குறுகிய காலம்
அமைதியாய் இருந்து
ஆங்கில இலக்கியம்
அருமையாய் புகட்டி
சவன மில்லாமல்
தன் பணி செய்தார்
உடல் நலமின்மையால்
பதவியை விட்டார்



அடுத்து வந்தவர்
அமெரிக்க நாட்டவர்
திருமதி கிளாரா
மொற் வாணி அவர்கள்
அயல் நாட்டவரே
ஆயினும் எமக்குப்
பெருமை தேடிய
பெருந் தகையாளர்

ஆங்கில அறிவின்
அவசியம் விளக்கி
சரளமாய் ஆங்கிலம்
தவழ்ந்திடச் செய்தார்

சிரேஷ்ட மாணவர்
திறமைச் சித்திகள்
பெற்றதனாலே
பெருமையும் உற்றனர்

அதன் பின் வந்தார்
அதிபர் சறோஜினி ராவ்!



இந்திய இராணுவப்
பெண்கள் அணியின்
பொறுப்பாய் இருந்தவர்
துடிப்பு மிக்கவர்

நிமிர்ந்த நடையும்
நேரிய பார்வையும்
அஞ்சாத நெஞ்சமும்
அமையப் பெற்றவர்

ஆங்கிலம் அருந் தமிழ்
ஆரிய மொழியுடன்
விஞ்ஞானம் மனையியல்
வியன் பெற வைத்தார்

பரந்து கிடந்த
பரப்பினைச் சுற்றி
மதிலினை எழுப்பிக்
கலை விழா வைத்துக்
கல்லூரி உயர்த்திய
கர்ம வீராங்கனை

ஆறு வருடம்
அரும் பணி புரிந்து
தாய் நாடு திரும்பினார்
சறோ ஜினி ராவும்
அடுத்து வந்தார்
அங்கே கற்பித்த
ஆறுமுகம் விமலா
அனைவரும் விரும்பிட



அறிவு, பணிவு
அன்பு, துணிவு
ஆற்றல், அமைதி
அணிகலன் இவைகள்
அமையப் பெற்றவர்
மனத்தினில் கருணையும்
மாண்பும் உடையவர்

கல்லூரி முன்னேற்றம்
கருத்தினிற் கொண்டு
கரும மாற்றக்
கல்லூரி தானும்

முதலாந் தரமாய்
முன்னுயர்த்தப் பட
விடுதிச் சாலையும்
விரிவு பெற்றிட
பிரார்த்தனை மண்டபம்
பெரிதும் முடிந்தது

புது முறைக் கேற்ப
பொறுப்பினை அரசாங்கம்
எடுத்துக் கொண்டதும்
இவர் காலம் தான்

அதன் பின் வந்தார்
அதிபராய் ஆங்கு
அங்கே கற்பித்து உப
அதிபராய் இருந்தவர்

செல்வி பத்மா
இராம நாதன் அவர்கள்
பாரதி கண்ட
புதுமைப் பெண்ணுக்கு



எடுத்துக் காட்டாய்
இலங்கிய இவரோ
பதவி ஏற்கப்
புது யுகம் பிறந்தது

கம்பீர உருவம்
கருணை உள்ளம்
நேர் கொண்ட பார்வை
நிமிர்ந்த நடையும்

நேர்மை நிதானம்
நிர்மல மனமும்
உரமும் உறுதியும்
உளத்தில் கொண்டவர்

கல்லூரிக் குல தெய்வம்
பிள்ளையார் மீது
கனமான பக்தி
குணமாய்க் கொண்டவர்

என் கடன் பணி
செய்து கிடப்பதே
என்பதற் கவர்
எடுத்துக் காட்டதாய்

தன் வாழ்வு தன்னைத்
தந்து கல்லூரி
பூரண வளர்ச்சியும்
பொலிவும் பெற்று

சகல துறையிலும்
தனித்துவம் துலங்க
மாவட்டம் அன்றி
மற்றிட மெங்கும்

புகழைப் பரப்பிப்
பொற் கால மாக
மிளிரச் செய்த
மேதகு அதிபர்

இவர் காலம் தனில்
இந்து மகளிர்
கொடி கட்டிப் பறந்தது - என்று
கூறுதல் மிகையில்லை

பதவியும் முடிய
பத்மா அவர்களை
இறைவன் அழைத்ததும்
இதுவுமோர் விந்தையே!

கல்லூரி தன்னையே
தன் உயிராய் மதித்தவர்
கல்லூரி வாழ்வுடன்
காலனும் வந்துமே
கணக்கினை முடித்திட - அவர்
காலமும் முடிந்தது



இதன் பின் வந்தவர்
இதயம் கவர்ந்த
(திருமதி) திவ்ய சிரோன்மணி
நாகராஜா நற்குண நங்கை
இராமநாதனின்
இயல் பினுக்கேற்ப
அரும்பாடு பட்டு
அமைதியாய் இருந்து
பெருமையாய் கடமை
திறமை யாய் ஆற்றினார்

விஞ்ஞான ஆசிரியை
வியப்புற ஆங்கு
அதிபர் பதவியை
அருமையாய் ஆற்றினார்

மென்மையாய்ச் சிரித்து
மெல்லப் பேசி
இன்னல்கள் பற்பல
இடர் வந்த போதும்
தன்னடக்கத்தால்
சாதுர்ய மாக

எல்லோர் விருப்பமும்
ஏற்றிட நடந்து
கண்ணிய மாகக்
கடமையைச் செய்த
பெண்மணி இவர் என்ற
பெருமையைப் பெற்றார்

கல்லூரி தன்னிலே
கல கலப்பாகப்
பொன் விழா நடத்திப்
புகழினை ஈட்டினார்

"பொன் விழா மலர்" தனைப்
போற்றிடும் வண்ணம்
வெளியீட்டு வைபவம்
மிகச் சிறப்பாக
நிகழ்த்திப் பெருமையை
நிலைத்திட வைத்தார்

போர்க்காலச் சூழல்
புகுந்திட்ட போதும்
அகதி முகமாய்க் கல்லூரி
அமைந்திட்ட போதும்

கடமையை முழுமையாய்க்
கருத்தினிற் கொண்டு
நடத்தி முடித்து
நற் புகழ் பெற்றார்



தற்போது இருப்பவர்
சரஸ்வதி ஜெயராஜா
" மெல்லெனப் பாயும் தண்ணீர்
கல்லையும் ஊடுருவிப் பாயும்"

என்பதற் கேற்ப
எதிலும் மென்மையாய்
மெல்ல நடந்து
மென்மை யாய்ப் பேசி

சிந்தை கவரச்
சிறப்பாய்க் கடமையைச்
செவ்வனே செய்யும்
சீரிய அதிபர்

வளர்க அவர் பணி
மிளிர்க புகழுடன்

**செல்வமலர் ( மலர் ) சிதம்பரப்பிள்ளை**
பழைய மாணவி
பழைய மாணவர் சங்கம் - கனடா

# என் கல்லூரி அன்னைக்கு...

என் கல்லூரித் தாயின்
கர்ப்பத்தில் இருந்தவள் நான்!
அவள் கருவுற்றாள்
நான் உருவுற்றேன்!

கர்ப்பத்தில் இருந்தபோது
காத்திரமாய்க் காத்திருந்தாள்
இருட்டாய்த்தான் இருந்தது எனக்கு
பிரசவித்த பின்னர் தான் - அன்னையின்
பிரமத்துவம் புரிகிறது.!! - நான்
செதுக்கப்பட்டிருக்கிறேன்... !

அங்கங்களில் கிளிசல்களில்லை...
ஆங்காங்கே விரிசல்களுமில்லை...
பார்த்துப் பார்த்து என்னைப்
பக்குவமாய்ப் படைத்து விட்டாள்!

காலம் கடந்த ஞானம்
கணக்கிலே வராதென்பர் - அவள்
கர்ப்பத்திலிருந்த போது .... நான்
கனதியாய் உணர்ந்ததெல்லாம்
சுடலை ஞானம் எனச்
சுட்டிச் சொல்லுகின்றேன்.

அன்னையின் ....
விளையாட்டு முற்றத்தில் - நான்
உதைத்திட்ட நாட்களில் - அவள்
வலியென்று அழவில்லை!
கூட்டுப்பிரார்த்தனையில்
கூடி நிற்கும் போது - சின்னக்
கூட்டமும் நடக்கும் - வரிசையில்
குளறுபடிகளும் நடக்கும்

முன்வரியில் நின்றுகொண்டே
முட்டுக்காலிலும்...
தோழமைக்காகத் தோப்புக்கரணமும்...
கண்டிப்புக்காக கையில் அடியும்...
பிறின்சிப்பலின் பிரம்புத்தடியும்...

இந்து வரலாறு இதுதான் என்று
இந்து நாகரிகம் விளக்கப்படுத்துகையில்...
வகுப்பில் ...
சந்துபொந்தெல்லாம் சத்தமிட்ட காலம்...
சட்டென்று ஆசான் நிமிர்ந்து பாரக்கையில...
சலனமின்றி நிசப்தமாய் இருந்திட்ட காலம்!

நாடகம் பேச்சென்று நானும் மேடையேறி
அரங்கத்தை அளவெடுத்த காலம்....!
ஆடல், பாடல் என அரங்கேற்றம் காண
அவாக் கொண்ட காலம் - என் கல்லூரிக்காலம்!

சின்னக் கோபம் செல்லச் சண்டை ...
துன்பப்பிரிவு ... அழுகைக்குரல்கள் ....
இரையும் சப்தம் ... கண்டிப்புத் தொனிகள்...
கண்டிட்ட காலம் - என் அன்னையின்
கர்ப்ப காலம்...!

இன்பம் உணர்ந்தேன் !!! - என்
அன்னை செதுக்கிவிட்ட
அனுபவத் துணையோடு - நானும்
மற்றோர் மத்தியில்
குழந்தையாய்த் தவழ்ந்தேன் ...!
இருந்தேன் ...! எழுந்தேன்...!
நடந்தேன் ...! - இப்போது
ஓடிக்கொண்டிருக்கின்றேன் ...! - ஏன்
பள்ளி வாழ்க்கையில் ...
படித்த பாடத்தை
சமூகத்தில் இப்போது நான்
பிரசவிக்கிறேன்...!

தோழிகளே...!
நானறிவேன் ... உங்களுக்கும்
இந்த உணர்விருக்கும் ... - என்
அன்னையின் கர்ப்பத்தில்
இப்போது அமர்ந்திருக்கும்
உறவுகளே...!
உங்களுக்கு புரிந்திட வாய்ப்பில்லை ...
காலம் கடந்து ஞானம்
எப்போதும் எழ வேண்டாம்!
கல்லூரி நாட்களிலே
புரிந்திட்டுக் கற்றிடுவீர்...!
அன்னை தந்த அறிவிற்காய் ...
அர்ப்பணிப்புச் செய்திடுவீரி...!




அவள் பிரசவித்தாள் - நான்
வெளியேறினேன்
சமூகத்தில் அனாதையாய் ...
தனிமையில் நின்றேன்!
அழுகையாய் வந்தது எனக்கு
அப்போது தான் ... அம்மாவின்
இருட்டு வயிற்றின்

என்னை ஈன்றெடுத்த
அன்னைக்கு நன்றி! - என்
ஆசான்களுக்கு நன்றி !
அன்னைக்காய் வாழ்வோம்...!
அன்னைக்காய் உழைப்போம்...!
அன்னையின் உயர்விற்காய் ....
அனைவரும் ஒன்றிணைவோம் ...!

**மாலினி அஜந்தன் (ஊடக வியலாளர்)**
செய்தி ஆசிரியர்
"டான் நியூஸ்" தொலைக்காட்சி

# 1960 - 1970






A Scene from "கற்புக்கனல்"



Mr. T. Muthusamypillai
(BAR-AT-LAW)
*former Manager, Jaffna Hindu College Board.*





National Level PT Competition Winners in 1960s

# கொடுமனக் கூனி

கலைபயில் கழகத்துக் கவின்பெறு மலருக்கு
மலைமலையாக வரைந்திடு கட்டுரைகள்
நெஞ்சையள்ளும் நவீனங்கள் தீஞ்சுவைக் கவிதைகள்
என எழுந்தது ஒரு குரல் உச்சத் தொனியில்
கட்டுரைக்கும் ஆற்றல் கடுகளவும் கிடையாத என்றனக்கு
கவிதை யெனிலோ அதன் இன்சுவை தெரியும்
புனையும் ஆற்றல் தினையளவும் கிடையாதே
நவீனமோவெனில் நல்லமிர்தம் போலிருக்கும்
படைக்கும் திறனை படித்தும் அறியேனே
என் செய்வேன்! ஏது செய்வேன்! என ஏங்கி
ஏட்டுக்கற்றை எழுதுகோல் இவை சகிதம்
மாடத்து மின்னொளியில் போய் அமர்ந்தேன்
கருத்துக்கு ஏங்கி விநாயகனை மனத்திருத்தி
கண்களை மூடி தவமிருந்தேன் தனிமையிலே
முத்தாரம் மார்பில் அசைந்து ஒளி வீச
செகத்தோர் தனைத்தூற்றும் அவதூறால்
அகத்தில் கோபத்தீ அலைபோல் எழுந்து
முகத்தில் கோடிட்டு வரைபடம் போல் விளங்க
கூனி நடந்து என்முன்னின்றாள் ஒரு பெண்
மேனி நடுங்க நெஞ்சில் உரத்தை வரவழைத்து
வீரம் தொனிக்க யாரம்மா நீயென்றேன்
பேதைபோல் விழிக்கின்றாய் எனை நீயறியாயோ
கம்பன் என்ற வம்பன் கட்டி விட்ட
மாயக் கதை கேட்ட மானிலத்துப் பெண்கள்
கூனியெனும் பெயரை கூசாது சொல்லி
ஏசி மகிழ்வர் தம்மினத்துள் சிலரையென்றாள்
ஓகோ! கேகயன் மடந்தை கைகேயி தன்
தூய சிந்தை திரிய வைத்த கூனி தானே நீயென்றேன்
ஐயொ! மகளே! என ஆரத்தழுவி எனை
கம்பன் தன் கவித்திறத்தால் தாழ்த்தி விட்டான் என்புகழை
தவறாக நீயும் கருதி விட்டாய் தங்காய்
பெண்ணோடு போரிட்ட பேடியாம் இராமனை
பண்டிதரும் பாமரரும் கலைபயில் மாணவரும்
கண்ணில்லாக் கபோதியர் போல் கம்பன் வழிகாட்ட
மாமன்னன் என்று மனதாரப் புகழ்கின்றார்
தயை கெட்ட தசரதன் தனிச் சூழ்ச்சி தானறியார்
பேரரசி கோசலைக்கு பிள்ளையில்லாக் காரணத்தால்
கற்புக்கரசி கைகேயி தன்னைக் காதலித்து
கேகயனை பெண் கேட்டுச் சென்ற அந்நாள்



அவள் தம் புதல்வற்கு அரசு ஈவேன் எனச் சொன்ன
சொல்லைத் தாம் மறந்து பரதனில்லாச் சமயத்து
இராமனுக்கு முடிசூட எண்ணிய தந்திரத்தை
மன்னன் காதலில் மயக்குற்ற மடந்தைக்கு
உண்மையைச் சொல்லி இடித்துரைத்த காரணத்தால்
கொடுமனக் கூனி என வைகின்றார் எனை எல்லோரும்
சிறு பிள்ளையானாலும் சிந்தித்துப் பாரம்மா
வாய்மை வழிநிற்றல் கொடுமையின் பால்படுமோ
தேனிருக்கும் மலர்க்கூந்தல் சானகி பின்தொடர
மோனத்தவஞ்செய்ய கானகத்தில் இராமன்
அன்னை கைகேயி முனைந்திலளேல்
அரக்கர் வேந்தன் இராவணனை வதம் செய்து
அமரர்க்கு இன்பம் இராமன் கொடுத்திருப்பானோ?
காப்பியம் செய்து கவியரசன் எனும் பெயரை
கம்பன் பெறுவதற்கு கதையை வளர்த்தவள் நானன்றோ
செய்ந்நன்றியறியாத அச்செந்தாப்புலவர் எனை
கொடுமனக் கூனியென அறிமுகம் செய்து விட்டான்
மண்ணுலகில் இச்சொல் பெண்மைக்கு இழுக்கன்றோ
தன்மான முடையீர் என்மானம் காக்க எழுந்திடுவீர்
எனும் சொல் கேட்டு திடுக்கிட்டு கண்விழித்தேன்
சிந்தனைப் புயலில் சிக்குண்டு சிதறிக் கிடந்த
ஏட்டுக்குவியலை பதம் பார்த்தது பட்டணத்து எருது
தவம் கலைந்த தவசியைப் போல் எழுதுகோல் கையெடுத்து
மாடத்தை விட்டு மெல்ல நகந்து விட்டேன்

**எமது கல்லூரியின் கலைப்பிரிவு பழைய மாணவியான செல்வி சந்திராதேவி இரத்தினம் அவர்களால் கல்லூரி சஞ்சிகை "சக்தி" க்காக - 1970 இல் வரையப்பட்ட கவிதை**

# நன்றிகள்


★ ஆசிச்செய்திகள், வாழ்த்துரைகள் வழங்கி மலரைச் சிறப்பித்த பெருந்தகைகளுக்கும்

★ கவிதைகள், கல்லூரி பற்றிய தகவல்கள், புகைப்படங்கள் என்பவற்றை தந்துதவிய பழைய மாணவிகளுக்கும்


★ மலர் வெளியீடு சம்பந்தமான அனைத்து முயற்சிகளுக்கும் பக்கத்துணையாக இருந்த கொழும்பு கிளைத்தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளை அவர்களுக்கும்

★ தங்கள் சங்கங்கள் சார்பான விடயங்களை தந்துதவிய கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சிய கிளைச் சங்கங்களின் தலைவிகளிற்கும்

★ இம்மலரின் அச்சுப்பிரதிகளை ஒப்பு நோக்கி நெறிப்படுத்துவதில் மனமுவந்து ஒத்துழைப்பு நல்கிய எமது சங்கத்தின் செயலாளர் திருமதி கலைவாணி விமலநாதன், எமது கல்லூரியின் உதவி அதிபர் திருமதி பத்மஜா பாஸ்கரக்குருக்கள் ஆகியோரிற்கும்


★ குறுகிய காலத்தில் மலரை அழகுற அச்சிட்டளித்த ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ் ஸ்தாபனத்திற்கும்

மனம் நிறைந்த நன்றிகள் என்றென்றும் உரித்தாகுக.











Jeyasri Printers, 34,Brown Rd, Jaffna.